6

MAY. 50

# கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை



366
3-12.

4 அணா

# கண்ணன்



தபால் பெட்டி : 604
மயிலாப்பூர்,
சென்னை, 4.

வருஷ சந்தா
ரூ. 3/-

# பொருளடக்கம்

மலர்: 1 இதழ்: 5

குழந்தைகளே! .. .. .. பக்கம் 2
தீராத விளையாட்டுப் பிள்ளை .. .. 3
சந்துருவின் அன்பு - கி. ஐயராமன் .. 4
அன்னக் குதிரை - 'வாசகன்' .. , .. 9
ஜக்கு - இருளில் - 'ஆர்வி' .. .. .. 17
பொம்மைப் பள்ளிக்கூடம் - 'சூடாமணி' .. 23
சம்பளப் பணம் - கோவை-ராமசந்திரன் .. 25
சூரியன் அஸ்தமிக்காத நாடு - ச. கு. க. .. 30
விடுமுறை வந்தால் - படங்கள் .. .. 35
கண்ணன் கழக அங்கத்தினர்கள் .. .. 39
எலி ராஜகுமாரி - 'சோமசன்மா' .. .. 41
பவழவல்லி - கி. ரா. .. .. .. 47
பால திலகர் - எம். எஸ். சுப்பிரமணிய ஐயர் 51
எழுத்திலே படங்கள் - 'மூட்டை' .. .. 56
கண்ணன் தபால் .. .. .. .. 57
குரங்கு - தி. ஜ. ர. .. .. .. .. 60

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

"வெயில் கொளுத்துகிறது" என்று பெரியவர்கள் முணுமுணுக்கிருர்கள். ஆனல் உங்களுக்கோ, வெயிலாவது! மழையாவது! சேர்ந்தாற்போல் ஒன்றரை மாதம், இரண்டு மாதம் லீவு விட்டிருக்கிருர்கள். இப்போதுதான் பலே ஜோர்.

'பரீட்சை முடிவு எப்படியாகுமோ!' என்ற கவலை மட்டும் சில குழந்தைகளுக்கு இருக்கும். 'கண்ணன்' வாத்தியாராக இருந்தால் எல்லாருக்குமே 'பாஸ்' போட்டுவிடுவான். இப்போதுதான் என்ன? 'கண்ணன்' கழகக் குழந்தைகள் எல்லோருமே 'பாஸ்' செய்துவிடுவார்கள் என்பதில் எனக்குச் சந்தேகமே இல்லை.

இந்தத் தடவை பேனுப் பரிசைத் தட்டிக்கொண்டு போகிறவன், சிரஞ்சீவி கி. ஜயராமன், திருநெல்வேலி (கண்ணன் கழகம்: J. 25. வயது, 14). இந்த இதழில் அவன் எழுதிய கதை வருகிறது. மாயம், மந்திரம், பூதம், பூச்சாண்டி இல்லாமல் உண்மையாகவே நடந்ததுபோல அந்தக் கதையை நன்ருக எழுதியிருக்கிருன். அவன் இன்னும் பல கதைகளை எழுதுவானென்று எதிர்பார்க்கிறேன்.

பல குழந்தைகள் இந்தப் பரிசுக்காகக் கதை எழுதியிருக்கிருர்கள். அவைகளைப் பார்த்தால் ஆளுக்கு ஒரு பேனவைப் பரிசாக அளித்துவிடலாமா என்று தோன்றிற்று. ஆனலும், பரவாயில்லை. இப்போது பரிசு வாங்காதவர்கள், இனிமேல் வைக்கப்போகும் போட்டியில் பரிசு வாங்கலாமே! அடிக்கடி போட்டி என்னவோ நடக்கப்போகிறது. ஆகையால் குழந்தைகள் மனம் சோர வேண்டிய அவசியமே இல்லை.

மற்ருெரு விஷயம்: பரிசுக்காகக் காத்திருக்கவே வேண்டாம். நல்ல கதைகளாகச் சொந்தமாக எழுதி அனுப்புங்கள். எல்லாக் குழந்தைகளும் ரஸிப்பார்கள் என்று தெரிந்தால், அந்தக் கதையைக் 'கண்ண'னில் வெளியிடுகிறேன். ஆகவே, பரிசுக்காக எழுதுவதோடு நிற்காமல், வேறு வேறு கதைகளை எழுதலாமே.

கண்ணன் கழகம் விரிவடைந்து வருகிறது. அவர்களுக்கு வழங்க வேண்டிய பதக்கம் பம்பாயில் தயாராகிறது. 'இத்தனை பதக்கங்கள் செய்ய வேண்டுமா! அப்படியானல் கொஞ்சம் அவகாசம் கொடுங்கள்' என்று உற்பத்தி செய்கிறவர்கள் கேட்டிருக்கிருர்கள். நீங்களும், விடுமுறையாகையால், ஆளுக்கு ஓர் ஊர் போயிருப்பீர்கள். விடுமுறை ஆனவுடன் உங்களைத் தேடிக்கொண்டு கண்ணன் கழகப் பதக்கம் வந்துவிடும்.

விடுமுறையில் எங்கெங்கோ சுற்றுவீர்களே! அதைப்பற்றியெல்லாம் எனக்கு ஏன் நீங்கள் எழுதக் கூடாது? நீங்கள் எழுதுவது நன்ருக இருந்தால், 'கண்ணன் தபாலி'ல் அதை வெளியிடுகிறேன். அப்படி வெளியாகும் கடிதங்களில் சிறந்ததற்கு ஒரு பரிசு தரலாம் என்று கூடத் தீர்மானித்திருக்கிறேன்.

இந்த லீவில் உங்களுக்குச் சுகமாகப் பொழுதுபோகட்டும்!

—ஆசிரியர்.

# தீராத விளையாட்டுப் பிள்ளை






பின்னலைப் பின்னின் றிழுப்பான்; - தலை
பின்னே திரும்புமுன் னேசென்று மறைவான்;
வன்னப் புதுச்சேலை தனிலே - புழுதி
வாரிச் சொரிந்தே வருத்திக் குலைப்பான்.

—பாரதியார்

பரிசு பெற்ற கதை

# சந்துருவின் அன்பு

கி. ஜயராமன்

(கண்ணன் கழகம்: J. 25)

மணி 'டண் டண் டணுர்!' என்று அடித்து ஓய்ந்தது. மடை திறந்த வெள்ளம் போல் பையன்கள் பள்ளிக்கூடத்திலிருந்து ஓடிவந்தார்கள். காலையிலிருந்து மாலை ஐந்து மணி வரையில் வெறும் சிறைக்குள் இருந்தவர்கள் தானே! பள்ளியில், "டேய், நாம்ப போய்க் கோலிக்குண்டு விளையாடணும்", "இல்லேடா! நான் போய் ஸினிமா பார்க்கணும்" - இதே போலத்தான் பேச்சு.

கொஞ்சங் கொஞ்சமாகச் சந்தடி குறைந்தது. மாணவர்கள் ஒன்றிரண்டுபேர் பள்ளியிலிருந்து வந்துகொண்டிருந்தார்கள். ஆனால் சந்துருவும் கமலமும் மட்டும் மெதுவாகப் பேசிக்கொண்டே வந்தார்கள். நடுவில் எங்கிருந்தோ ராமு வந்து தொலைந்தான்.

"டேய், சந்துரு! என்னடா?" என்று வீண் சண்டைக்கு வந்தான் அவன். ஆனால் கமலம் சந்துருவைத் தடுத்து, "வா சந்துரு! வீட்டுக்குப் போகலாம்" என்றாள்.

ராமுவும் அவன் சிநேகிதர்களும் அவர்களைக் கேலி செய்துகொண்டே போய்விட்டார்கள்.

பள்ளிக்கூட வாசலைத் தாண்டிக் கொஞ்ச தூரம் போனதும் தன் கையைப் பார்த்து, "ஓ" என்று கமலம் கத்தினாள்.

"என்ன, என்ன!" என்று பதறிப்போய்க் கேட்டான் சந்துரு.

"சந்துரு! என்...மோ...திர...த்தைக் காண...ல்லை" என்றாள் கமலம் அழுது கொண்டே.

"ஐயையோ! அம்மா அடிப்பாளே! நான் வரவில்லை; நீ வீட்டுக்குப் போ" என்றான் சந்துரு. கமலா கல்லாய்ப் பிரமித்து நின்றாள்.

* * * *

சந்துரு தன் பெற்றோர்களுக்கு ஒரே பிள்ளை. கமலம் அவன் பெரியப்பாவின் பெண். கமலத்தின் அம்மா இறந்து போய் இரண்டு வருஷங்கள் ஆகின்றன. பெரியப்பாவும் கமலத்தைச் சந்துருவின் அப்பாவிடம் ஒப்படைத்து விட்டுத் தஞ்சாவூரில் வேலை பார்த்தார். ஆனால் கமலம், பாவம், சந்துரு

வின் வீட்டில் வேலைக்காரி செய்யும் வேலைகள் எல்லாம் செய்வாள். அவளுடைய சட்டைகள் எல்லாம் இரண்டு வருஷங்களுக்கு முன் அவள் அப்பா வாங்கினவை. சட்டைகளின் ஓரத்தில் சில இடங்களில் ஒட்டுப் போட்டிருந்தது. சந்துருவின் அம்மா நல்லவள்தான். ஆனால் அவளுக்குக் கமலத்தைப் பிடிக்கவில்லையோ, இறந்து போன அவள் அம்மாவின் மேலிருந்த கோபமோ என்னவோ தெரியவில்லை, அவளை மிகவும் கஷ்டப்படுத்தினாள். அப்பாவுக்குக் கமலத்தின்மேல் பிரியம் தான். ஆனால் அவர் ஒன்றும் செய்ய முடியவில்லை. சந்துரு கமலத்தினிடம் மிகவும் அன்பாக இருப்பான். கமலத்துக்குக்கூட அவன்மேல் மிகவும் பிரியம். சந்துருவுக்கு ஒரு வருத்தம்: அவள் கூட ஒரு நாளும் சேர்ந்தாற்போல் சாப்பிட்டது கிடையாது. ஏனென்றால், அவனுக்குச் சாப்பாட்டை அவள்தான் பரிமாறுவாள்.

ஒரு நாள் சந்துருவின் மாமா வந்தார். மாமாவுக்குச் சந்துருவிடம் அசாத்தியப் பிரியம். அதனால் அவனுக்காக ஒரே மாதிரியான இரண்டு தங்க மோதிரங்கள் வாங்கி வந்தார். மாமா ஊரிலிருந்து வந்ததும், "மாமா! எனக்கு என்ன வாங்கி வந்திருக்கிறாய்?" என்று சந்துரு கேட்டான்.

அவர் உடனே இரண்டு மோதிரங்களையும் அவன் கையில் கொடுத்தார்.

உடனே அவன் உள்ளே சமையலறையில் காரியம் செய்துகொண்டிருந்த கமலத்தைக் கூப்பிட்டான். எதற்கு என்று ஒருவருக்கும் தெரியவே இல்லை. கமலம் ஓடிவந்தாள். "இந்தா, கமலா!



இதைப் போட்டுக்கோயேன்!'' என்று ஒரு மோதிரத்தை அவள் கையில் கொடுத்தான். கமலா ஆசையுடன் அதைக் கையில் போட்டுக்கொண்டாள். அதைப் பார்த்தவுடன் அவன் அம்மாவுக்கு அதிகக் கோபம் வந்தது; "டேய்! என்னடா, இந்தத் துடைப்பக்கட்டைக்கு மோதிரம் குறைச்சலோ! கஷ்டப்பட்டு இவள் அப்பன் சொன்னமாதிரி பள்ளிக்கூடத்திலே படிக்க வச்சிருக்கேன். போதாததற்கு மோதிரம் என்னடா, மோதிரம்!'' என்று இரைந்தாள். உடனே சந்துருவின் அப்பாவும் மாமாவும், "பரவாயில்லே! போட்டுக்கட்டுமே, பாவம்!'' என்றார்கள்.

அம்மாவுக்கு இதைக் கேட்டதும் கோபம் வந்தது. ஆனால் அடக்கிக்கொண்டாள். இந்த நிகழ்ச்சி அவனுக்கு ஞாபகம் வந்தது.

"ராமு சண்டைக்கு இழுத்தானே, அங்கே போய்ப் பார்ப்போம்'' என்றான் சந்துரு.

அப்போது பள்ளிக்கூடம் விட்டு அரைமணி நேரம் ஆகியிருக்கும்.

ஹெட்மாஸ்டர் வீட்டுக்குப் புறப்பட்டுக்கொண்டிருந்தார். அந்த இடத்துக்கு இரண்டு பேரும் வந்தார்கள். அங்கே மோதிரம் இருந்தால் தானே அகப்படும்? எவ்வளவு தேடியும் காணவேயில்லே. கமலம் விசித்து விசித்து அழுதாள்.

சந்துரு பார்த்தான். அவளுக்குத் தெரியாமல் தான் போட்டுக்கொண்டிருந்த மோதிரத்தை மெதுவாக மணலில் புதைத்து, "கமலம்! இங்கே தேடவேயில்லேயே! தேடுவோம்'' என்று சொல்லிப் புதைத்த இடத்தைத் தொட்டுப் பார்த்தான். அதிலிருந்த மோதிரத்தைக் கண்டு கமலம் சந்தோஷம் அடைந்தாள். தன் விரலில் போட்டுக்கொண்டாள்.

அடுத்த நிமிஷத்தில் இருவரும் மாடப் புறாக்களைப் போல மகிழ்ச்சியுடன் சென்றார்கள். சந்துருவுக்கு ரொம்ப ஸந்தோஷம். அம்மாவிடம் அடிபடாமல் கமலத்தைத் தப்புவித்ததைக் கண்டு ஆனந்தம்.

இரவு சாப்பிடும்போதும் படிக்கும்போதும் சந்துருவின் கையில் மோதிரம் இல்லாததை ஒருவரும் பார்க்கவில்லே.

* * * *

மறுநாள் காலே. பள்ளிக்கூடத்துக்கு இருவரும் சென்றார்கள். அங்கே வந்தவுடன் ஹெட்மாஸ்டர் கமலத்தைக் கூப்பிட்டு, "உன்னுடைய மோதிரத்தை நேற்றுத் தொலைத்துவிட்டாய்! இல்லேயா? பள்ளிக்கூடம் விட்டு ஐந்து நிமிஷங் கழித்து, ப்யூன் இதைக் கொண்டு




வந்தான். எல்லாரிடமும் கேட்டேன். இது உன்னுடைய மோதிரம் என்று இன்று உன் சிநேகிதிகள் சொன்னார்கள். இந்தா மோதிரம். இனிமேல் ஜாக்கிரதையாக இரு" என்று கூறி மோதிரத்தைக் கையில் கொடுத்தார். அவளுக்கு மிகவும் ஆச்சரியமாய் இருந்தது.

"ஸார்! என் மோதிரம் கிடைத்துவிட்டது. இதோ பாருங்கள், ஸார். சந்துரு தேடிக் கொடுத்துவிட்டான்" என்று வணக்கத்தோடு கூறினாள். ஹெட்மாஸ்டர் உடனே சந்துருவை அழைத்து வர ப்யூனை அனுப்பினார்.

அவன் வந்ததும், "நீயா தேடிக் கொடுத்தாய்?" என்று

கேட்டார். சந்துருவுக்கு விஷயம் ஒருவாறு புரிந்தது.

"ஸார்! இங்கே வாருங்கள் தயவு செய்து" என்று ஹெட் மாஸ்டரைத் தனியாக அழைத்துப்போய் முதல் நாள் நடந்ததைக் கூறினன். பின் அவரிடம், "ஸார்! அவளிடம் இதைச் சொல்லாதீர்கள், ஸார்!" என்ருன். ஹெட்மாஸ்டர் கண்ணில் ஜலத்தோடு தலையாட்டினர். கைக்குட்டையால் கண்ணைத் துடைத்துக் கொண்டார். சந்துரு பணிவோடு வேண்டிக்கொண்டதை நினைக்க ரொம்பவும் வருத்தமாயிருந்தது அவருக்கு. ஹெட் மாஸ்டர் அவன் கையில் மோதிரத்தைக் கொடுத்தார். அவனும் சந்தோஷமாக வாங்கிக் கொண்டு, "கமலா! காலையில் பள்ளிக்கூடத்தில் கிரிக்கெட் விளையாடும் போது என் மோதிரத்தைத் தொலைத்து விட்டேன். ஆனல் கிடைத்து விட்டது!" என்று சொல்லிக் கொண்டு கமலாவுடன் வகுப்புக்கு நடந்தான்.

இதையே பார்த்துக்கொண்டிருந்தார் ஹெட்மாஸ்டர்.

* * * *

சாயங்காலம். வீட்டில் கமலம் இதைச் சொல்லவேயில்லை. காரியம் செய்து கொண்டிருந்தாள். அவள் சிற்றப்பா எங்கேயோ சிநேகிதர்களுடன் உலாத்தப் போய் விட்டார். சந்துரு கிரிக்கெட் விளையாடப் போய் விட்டான்.

இருட்டிவிட்டது. மணி ஆறரையாகிவிட்டது. அன்று சீக்கிரமாக அப்பா திரும்பி வந்தார். சந்துருவும் விளையாடி விட்டு வீட்டுக்கு வந்தான். காலைக் கழுவிக்கொண்டு பூஜையறையில் நுழைந்தான். ஸ்வாமியிடம், "ஸ்வாமி! மோதிரம் கிடைத்துவிட்டது. ரொம்பவும் சந்தோஷம்" என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். அவன் அப்பாவுக்கு ஹெட்மாஸ்டர் ஒரு சிநேகிதர். அன்று நடந்த நிகழ்ச்சியை அவன் அப்பாவிடம் சொல்லிவிட்டார். அப்பா அம்மாவிடம் இந்த நிகழ்ச்சியைச் சொல்லவே சீக்கிரம் வந்தார். அப்பா அம்மாவிடம் சொல்லிக் கொண்டிருந்ததைக் கமலம் சமையல் அறையிலிருந்து கேட்டுக்கொண் டிருந்தாள். உடனே சந்துருவிடம் போய், "நீ எனக்குக் கொடுத்தது உன் மோதிரமா?" என்ருள். அப்போது அங்கே வந்த பெற்ருேர்கள் இருவரும் சந்துருவின் கண்ணிலிருந்து ஜலம் வருவதைக் கவனித்தார்கள். அன்றிலிருந்து அம்மா கமலத்திடம் மிகவும் அன்பாய் இருந்தாள்.

# அன்னக் குதிரை

'வாசகன்'

பச்சைப் பசேசலென்று எங்கே பார்த்தாலும் தழைத்த செடி கொடிகள்; மரங்கள். மலையடிவாரத்தில் அத்தனை செழிப்புக்குக் காரணம் அந்தத் தேன் அருவிதான். சல சலவென்று கூழாங்கற்களை அரித்து ஓடும் தண்ணீர் தேன்போல இனிக்கும்.

அங்கேதான் வல்லாளன் வந்தான். பதினெட்டு வயசிருக்கும் அவனுக்கு. இரும்பு போலத் திரண்டு உருண்டு பலமாக இருக்கும் அவன் அங்கங்கள். அவன் கையில் கடிவாள வார் இருந்தது. கடிவாளம் தங்கம். வாரில் இரண்டு பக்கத்திலும் பளபளக்கும் ரத்தினங்கள் பதித்திருந்தன.

தேன் அருவிக்குப் பக்கத்தில் இரண்டு மூன்று பேர் நின்றுகொண்டிருந்தார்கள். ஓர் அழகிய பெண் ஒரு குடத்தில் நீர் மொண்டுகொண் டிருந்தாள். வல்லாளனுக்கு மிகவும் தாகமாக இருந்தது. அவன் அந்தப் பெண்ணைப் பார்த்து, "பெண்ணே, தாகமாக இருக்கிறது; கொஞ்சம் தண்ணீர் தருகிருயா?" என்று கேட்டான். அவள் குடத்தோடு அவனிடம் நீட்டினுள். அதை வாங்கி அப்படியே மடக்கு மடக்கென்று வல்லாளன் குடித்தான்.

"இதென்ன தேன்போல் இருக்கிறதே! இதுதான் தேனருவியா?" என்று கேட்டான் வல்லாளன். அவன் எதைத் தேடிவந்தானே, அதை அடைந்தது அவனுக்குத் தெரியாது.

"ஆமாம்; தேனருவிதான் இது" என்ருள், அந்தப்பெண்.

தாகம் தணிந்த சந்தோஷத்தைக் காட்டிலும் அதிகமான ஆனந்தம் வல்லாளனுக்கு ஏற்பட்டது. ஏன் தெரியுமா? அந்த அருவியைத் தேடிக்கொண்டுதான் அவன் நெடுந்தூரம் அலைந்து வந்தான்.

அங்கே இருந்த ஒரு கிழவன் அவன் கையிலிருந்த கடிவாளத்தைப் பார்த்துவிட்டு, "உன் குதிரை எங்கேயாவது ஓடிப் போய்விட்டதோ?" என்று கேட்டான்.

வல்லாளன் அதைக் கேட்டு, "நான் குதிரையை இழக்கவில்லை. இனிமேல்தான் குதிரையை அடையப் போகிறேன்" என்ருன்.

கிழவன் அதைக் கேட்டுச் சிரித்தான். "ஹஹஹா! என்ன புத்திசாலியப்பா நீ! குதிரையை இனிமேல்தான் அடையப் போகிருயா? அந்தக் குதிரையை நீ கண்ணுலாவது பார்த்திருக்கிருயா? அதுவும் இல்லையோ?" என்று கேட்டான்.

"பார்த்ததும் இல்லை. அன்னக் குதிரை என்று கேட்ட

2

தில்லையா தாத்தா? அது வானத்தில் மிக உயரத்தில் பறக்குமாம். இந்தப் பக்கங்களில்தான் உல்லாசமாகத் திரிந்துகொண்டிருக்குமாமே" என்று வல்லாளன் சொன்னான்.

கிழவன் கையைக் கொட்டிக் கடகடவென்று சிரித்தான். "நீயும் அந்தப் பைத்தியக்காரக் கூட்டத்தைச் சேர்ந்தவனு? சரிதான், சரிதான். அட பைத்தியக்காரா! நன்ருக அன்னக் குதிரையைத் தேடி வந்தாய்! 'அந்தக் குதிரை வாயு வேகம் மனே வேகமாகப்போகும். அப்படி இப்படி' என்று இந்த நாட்டுப் பைத்தியங்கள் ஒரு கதை கட்டி விட்டார்கள். அதையும் மெய்யென்று நம்பி நீ வந்திருக்கிருயே; நான் என்ன சொல்வது!" என்ருன்.

அங்கே நின்ற பெண் உடனே, "என்ன தாத்தா அப்படிப் பேசுகிருய். எங்கள் தாத்தா அன்னக் குதிரையைப் பற்றிக் கதை கதையாகச் சொல்கிருர். இந்த அருவி நீரிலே அதன் நிழல்கூடத் தெரிவதுண்டென்று சொல்லியிருக்கிருரே" என்ருள்.

உடனே வல்லாளன் அவளைப் பார்த்தான்; "இன்னும் என்ன என்ன சொன்னுர்?" என்று ஆவலோடு கேட்டான்.

"அந்த மாயக்குதிரை யார் கண்ணிலும் படுவதில்லையாம். அதற்குச் சமானமான பிராணி இந்த உலகத்தில் எங்கும் இல்லையாம். எப்போதாவது வெயில் காலத்தில் இந்தத் தேனருவிக்கு வந்து நீர் குடிக்குமாம்." இப்படி அவள் சொன்னுள்.

"நீ அதைப் பார்த்ததில்லையா?" என்று வல்லாளன் அவளைக் கேட்டான்.

"சில சமயங்களில் இந்த அருவிக் கரையில் சில சுவடுகளைப் பார்த்திருக்கிறேன். குதிரைக் குளம்பின் சுவடுகளைப்போல அவை இருந்தன. ஒரே ஒரு சமயம் குதிரை கனைத்ததைப் போல ஒரு சத்தத்தையும் கேட்டேன். அது கேட்பதற்குச் சங்கீதம்போல எவ்வளவு இனிமையாக இருந்தது, தெரியுமா? இந்த அருவி நீர் குடித்தால் எத்தனை இனிப்பாக இருக்கிறது! அதுபோல அந்தக் கனைப்பும் கேட்பதற்கு இனிமையாக இருந்தது."

அவள் சொல்வதை வல்லாளன் கவனமாகக் கேட்டு, "வேறு யாரும் அன்னக் குதிரையைப் பார்த்ததில்லையா?" என்று அங்கே நின்றிருந்தவர்களைக் கேட்டான். யாரும் பதில் சொல்லவில்லை. ஒரு சின்னப் பையன்; ஆறு வயசு இருக்கும்: அவன் வல்லாளனுடைய முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தான். அந்தக் குழந்தைப் பையன் இப்போது பேச ஆரம்பித்தான். "நான் பார்த்திருக்கிறேன், அண்ணு! நான் விளையாட இங்கே வருவேன். பூப்பறிக்க வருவேன். சில சமயங்களில் ஜலத்தில் நீல வானம் தெரியும். ஒரு பறவையைப்போல அன்னக் குதிரை வெகு உயரத்தில் பறந்து போகிறதைப் பார்த்திருக்கிறேன். அதன்மேல் ஏறிக்கொண்டு உயர உயரப் பறக்கவேண்டுமென்று எனக்கு

ஆசையாக இருக்கும். கொஞ்ச நாழிகை கழித்துப் பார்த்தால் குதிரை மறைந்து போகும்'' என்று அந்தச் சிறுவன் கணீரென்ற குரலில் சொன்னான். எல்லோரும் ஆச்சரியத்தால் அவனையே பார்த்தார்கள். வல்லாளன் குதித்து ஓடிச் சென்று அந்தக் குழந்தையைத் தூக்கிக்கொண்டான்.

வல்லாளனுக்கு நம்பிக்கை உண்டாயிற்று. குதிரையின் கர்ஜனையைக் கேட்டதாக அந்தப் பெண் வேறு சொன்னாள் அல்லவா? அதுவும் அவனுக்கு நம்பிக்கையை ஊட்டியது. அது முதல் வல்லாளன் அந்த அருவிக்குப் பக்கத்திலேயே திரிந்துகொண்டிருந்தான். மணிக்கணக்காக அருவிக் கரையோரத்தில் உட்கார்ந்து கொண்டு, குதிரையின் நிழல் தெரிகிறதா என்று கூர்ந்து கவனிப்பான்.

பக்கத்து ஊர்க்காரர்களெல்லாம் அவனைப் பார்த்துப் பரிகாசம் செய்தார்கள். அவன் ஒன்றையும் காதில் போட்டுக்கொள்ளவே இல்லை. அந்தச் சின்னப் பையன் மாத்திரம் சில சமயங்களில் அங்கே விளையாட வருவான். அப்போதெல்லாம் அவனும் வல்லாளனுடன் அருவி நீரை நெடுநேரம் பார்த்துக் கொண்டேயிருப்பான். ஆவலோடு இருவரும் அண்ணாந்து ஆகாசத்தைப் பார்ப்பார்கள். இப்படிப் பல நாட்கள் கழிந்தன.



"வல்லாளன் இவ்வளவு தீவிரமாக அன்னக் குதிரையைப் பார்க்கக் கவலைப்படுவானேன்?" என்று நீங்கள் கேட்பீர்கள். அது பெரிய கதை; சுவாரசியமான கதை.

கலிங்கம், கலிங்கம் என்ற தேசத்தில் காலிங்கன் என்ற அரசன் ஆண்டு வந்தான். அந்த நாட்டில் பல வருஷங்களாக மூன்று தலைப் பூதம் ஒன்று புகுந்து பல அட்டூழியங்களைச் செய்து வந்தது. பிரம்மாண்டமான உடம்பு, அவலட்சணமான சரீரம். சிங்கத் தலை ஒன்று, ஆட்டுத் தலை ஒன்று, பாம்புத் தலை ஒன்று; நீண்ட நகங்களையுடைய கைகள். மூச்சு விட்டாலே மரங்

கள் எல்லாம் பஸ்மமாகி விடும்.

திடீரென்று அது ஓரிடத்தில் தோன்றும். மூன்று வாய்களை யும் 'ஆ'வென்று திறக்கும். அவற்றிலிருந்து எரிமலையி லிருந்து கிளம்புவதுபோலத் தீப்பிழம்பு உண்டாகும். பிறகு அங்கே பயிர் பச்சை, மனிதர் மாடு, எதுவும் இராது. எல்லாம் படுசூர்ணமாகிவிடும். கலிங்க தேசம் இந்தப் பூதத்தினுல் கொஞ்சம் கொஞ்சமாக நாச மாகிக்கொண்டு வந்தது. ராஜா வாகிய காலிங்கனுக்கு உண் டான கவலைக்கு எல்லையே இல்லை.

இப்படி இருக்கும் காலத்தில் ஒருநாள் விதர்ப்ப தேசத்தி லிருந்து வல்லாளன் அரச னிடம் வந்தான். மிகவும் பல சாலியாகவும் அறிவாளியாக வும் இருந்த அவன் எத்தனையோ பராக்கிரமச் செயல்களைச் செய் திருக்கிறுன்.

மூன்று தலைப் பூதத்தைப் பற்றி அரசன் சொன்னதிலி ருந்து, அதைக் கொல்லவேண்டு மானுல் முதலில் அதன் வேகத் தோடு போட்டியிட வேண்டு மென்று வல்லாளன் தெரிந்து கொண்டான். அது மட்டுமா? அதன் எதிரே நின்று அதை மாய்ப்பது சுலபம் அல்ல. அது பூமியிலேதான் ஓடும். ஆகை யால் ஆகாசத்தில் வேகமாகப் பறக்கவும், பூமியிலும் வேகமாக ஓடவும் முடியுமானுல் மூன்று தலைப் பூதத்தை வெல்லலாம். மச்ச நாட்டுப் பிராந்தியத்தில் தேனருவிக் கரையில் அன்னக் குதிரை உலவும் செய்தியை யாரோ சொல்லிக் கேட்டிருந் தான். அந்தக் குதிரை கிடைத்து விட்டால் அதன் மேல் ஏறி மூன்று தலைப் பூதத்தை வெல்ல லாம்.

இந்தத் தீர்மானத்துடன் அன்னக் குதிரையைத் தேடிக் கொண்டு அவன் புறப்பட்டு விட்டான். வழியில் ஒரு காடு. அங்கே ஒரு முனிவர் தவம் செய்துகொண் டிருந்தார். அவ ரிடம் விநயத்துடன் வல்லாளன் தன் கதையைச் சொன்னுன். முனிவர் ஒரு கடிவாள வாரை வல்லாளன் கையில் கொடுத்து, "அப்பா, நீ செய்யத் துணிந்த காரியம் மிகச் சிறந்தது. தேசத்துக்கே நன்மையானது. நீ மச்ச நாட்டுக்குப் போய்க் குதிரையைப் பார். அப்படி ஒரு குதிரை இருந்தால் அதை நீ அணுகி இந்தக் கடிவாளத் தைப் பூட்டிவிடு. பிறகு அது உன் இஷ்டப்படி நடக்கும்" என்று ஆசிகூறி அனுப்பினுர்.

வல்லாளன் அதைப் பெற் றுக்கொண்டு ஊரூராக அலைந்து திரிந்து கடைசியில் தேனரு வியை அடைந்தான். இதுதான் அவன் கதை!

ஒரு நாள் அருவிக் கரையில் அந்தச் சிறுவன், பாவம், வீட் டுக்குக்கூடப் போகாமல் வல்லாளனேடே இருந்தான். வல்லாளனுடைய கவலையைப் பார்த்து அவனுக்குத் துக்கம் துக்கமாக வந்தது. அவனுடைய பிஞ்சு நெஞ்சு உருகியது. அதனுல் அவன் கண்களில் நீர் துளித்தது.

அந்தக் கண்ணீரால் நேர்ந்த அதிசயமோ என்னவோ! ஒரு



வெண் பறவை வானத்தில் வெகுஉயரத்தில் பறப்பது நீருக்குள் தெரிந்தது. உடனே சிறுவன் மூச்சுக்கூட விடாமல் காதோடு காதாக, "அதோ பார்: தண்ணீர்க்குள்ளே" என்றான்.

வல்லாளன் அருவியைப் பார்த்தான். அண்ணாந்து பார்த்தான். ஆஹா! என்ன அழகு! என்ன அழகு! வெள்ளியைப் போல அதன் சிறகுகள் வெயிலில் பளபளத்தன.

வல்லாளன் கூர்ந்து மேலே கவனித்தான். அவனுக்கு மார்பு படபட வென்று அடித்துக்கொண்டது. ஆகாசத்தில் பறந்தது, திடீரென்று மேகத்தில் மறைந்து கொண்டது. அடுத்த நிமிஷம் மறுபடியும் கண்ணுக்குப் புலப்பட்டது.

"அண்ணு, பறவையல்ல அது! அன்னக் குதிரையேதான் அண்ணு!" என்ருன் சிறுவன்.

"ஆமாம்; இப்படி வந்துவிடு! நம்மைக் கண்டு ஓடிப்போனு லும் போய்விடும்" என்று வல்லாளன் தன் இளந்தோழனை அழைத்துக்கொண்டு, கரைக் குப் பக்கத்தில் வளர்ந்திருந்த புதரில் மறைந்துகொண்டான்.

மேலிருந்து அன்னக் குதிரை தன் வெள்ளி வெண் சிறகுகளை அகல விரித்தபடி ஒய்யாரமாகக் கீழே இறங்கியது. மெல்ல மெல்ல நழுவி விழுவதுபோலப் பூமிக்குப் பக்கத்தில் வந்து விட்டது. வரும்போது வட்ட மிட்டது. வட்டமாகச் சுற்றிச் சுற்றி வந்து மெதுவாகப் பூமி யின்மேல் காலை வைத்தது. கரை யில் நின்றபடியே கழுத்தைத் தாழ்த்தி அருவி நீரைக் குடித் தது. அதன் மேனியின் பள பளப்பைப் பார்க்க ஆயிரம் கண்வேண்டும்.

வல்லாளன் இதுதான் சமயம் என்று ஒரே தாவாகத் தாவி அதன்மேல் உட்கார்ந்து கொண்டான். அப்போது அந் தக் குதிரைக்கு வந்த ஆத்திரத் தைப் பார்க்கவேண்டுமே! உடம் பைப்போட்டு உலுக்கியது. மேலே வெகு வேகமாகப் பறந் தது. தலைகீழாகக் குட்டிக் கரணம் அடித்தது. மலைகளின் மேல் உராசிக்கொண்டு பறந் தது. வல்லாளன் குதிரையின் பிடரிமயிரை நன்ருகப் பற்றிக் கொண்டான். மலைக்குப் பக்கம் வந்தால் அதில் மோதாதபடி லாகவமாக உடம்பை வளைத்துக் கொண்டான்.

குதிரை கழுத்தை வளைத்து அவனைக் கடிக்கப் பார்த்தது. சாமர்த்தியமாக அந்தச் சமயம் பார்த்துத் தன் கையில் இருந்த கடிவாளத்தை அதன் வாயில் பூட்டிவிட்டு, வாரை இழுத் தான். என்ன ஆச்சரியம்! பழகின குதிரை மாதிரி உடனே அது அடங்கிவிட்டது. துள்ளிக் குதிக்கவில்லை; மெதுவாகப் பறக்கத் தொடங்கியது. அடே அப்பா, அது பண்ணின ஆர்ப் பாட்டம் என்ன? தடபுடல் என்ன? இப்போது மகா சாதுவாக அடங்கிப் போய் விட்டதே!

வல்லாளன் எப்படியெல்லாம் போக வேண்டுமென்று ஏவுகி ருனே, அப்படி யெல்லாம் குதிரை போயிற்று. இனிமேல் தான் சொன்னபடியெல்லாம் கேட்கும் என்பதை அவன் உணர்ந்துகொண்டான். இனி மேல் அது தன்னை விட்டுப் பிரியாது என்ற நம்பிக்கை வந்துவிட்டது. அதன்மேல் ஏறிக்கொண்டு உலகத்தையெல் லாம் சுற்றினுன்.

இப்படி உல்லாஸமாகப் பிரயாணம் செய்த பிறகு வல்லாளனுக்கு மூன்று தலைப் பூதத்தின் ஞாபகம் வந்தது. உடனே குதிரையின் மேல் ஏறி, கலிங்க நாட்டை அடைந் தான். ஓர் இரும்புக் கவசத்தை யும் ஆயுதங்களையும் சம்பாதித் துக்கொண்டான். அங்கே பூதம் இருக்கிற மலைப் பிரதேசத் துக்கு மேலே வெகு உயரத்தில் பறந்தான். ஒரே பொட்டல். காடுகளும் வீடுகளும் எரிந்த சாம்பல் குவியல் குவிய

லாக இருந்தது. எல்லாம் மூன்று தலைப் பூதத்தின் அக்கிரமச் செயல்தான்.

இன்னும் கீழே இறங்கி வந்தபோது ஒரு பெரிய குகை அங்கே தெரிந்தது. அந்தக் குகையின் வாசலில்தான் பூதம் படுத்துக்கொண்டிருந்தது. என்ன பயங்கரமான உருவம்! பாம்புத் தலை மாத்திரம் விழிப்புடன் இருந்தது. ஒரு பெரிய மிருகத்தை வாயிலே கவ்விக் கொண்டிருந்தது.

மூன்று தலைகளிலும் மூச்சு வரும் போது புஸ் புஸ் என்று படலம் படலமாகப் புகை வந்துகொண்டிருந்தது. அந்தப் புகை பட்டாலே மயக்கம் வரும்போல இருந்தது.

வல்லாளன் தன் கத்தியை உருவிக்கொண்டான். அன்னக் குதிரை, பூதத்தைக் கண்டவுடன் கனைத்தது. அவ்வளவுதான்; பூதம் ஒரே தாவலாகத் தாவி வல்லாளன் மேல் பாய்ந்தது. நல்லவேளை! அன்னக் குதிரை மேலே பறந்து போய் விட்டது. அன்னக் குதிரை பறக்கிற உயரத்தை அதனால் எட்ட முடியுமா? அதற்குச் சிறகுகள் இல்லை. இருந்திருந்தால் கலிங்க தேசம் மாத்திரமா, உலகமே நாசமாகியிருக்கும். குதிரையை முடுக்கினான், வல்லாளன். வெகுவேகமாகப் பூதத்தின் பக்கத்தில் அது பாய்ந்தது. வல்லாளன் தன் கத்தியினால் குறி பார்த்து ஆட்டுத் தலையை வெட்டினான். கண் இமைக்கும் நேரத்தில் இது நடந்தது.

ஒரு தலையை இழந்த பூதம் அதிக ஆக்கிரோஷத்துடன் உறுமியது. சிங்கத் தலை கர்ஜித்தது. பாம்புத் தலை சீறியது. தன் வாயிலிருந்து நெருப்பு ஜ்வாலையைக் கக்கியது. குதிரை அவன் குறிப்பு அறிந்து பறந்தது. இப்போது சிங்கத் தலையை வெட்ட அவன் குறி பார்த்தான். பூதம் தன் நகங்களை நீட்டிக்கொண்டிருந்தது. 'சதக்!' வல்லாளன் வேகமாகச் சிங்கத்தின் தலையை வெட்டிவிட்டான். ஆனால், அதன் நகங்கள் அவனைப் பீறிவிட்டன. அன்னக் குதிரைக்குக் கூடக் கொஞ்சம் காயம். அதற்கே இப்போது வீரம் உண்டாகிவிட்டது. ஒருதடவை மேக மண்டலம் வரையில் பறந்து, மறுபடியும் கீழே வந்தது.

பூதத்துக்கு இப்போது பாம்புத் தலை மாத்திரம் இருந்தது. வாயிலிருந்து அக்கினியை நெடுந்தூரத்துக்குக் கொப்புளித்தது. உஸ், உஸ் என்று சீறியது. அதைக் கேட்டு நெடுந்தூரத்தில் உள்ள மனிதர்கள் நடுங்கினார்கள்.

குதிரை கீழே பாய்ந்தது. பூதம் தன் வாய்யை ஆவென்று திறந்துகொண்டிருந்தது. எவ்வளவு பெரிய வாய்! இப்போது குதிரை பூதத்தின் வாய்க்குப் பின்புறமாகப் பாய்ந்தது. வல்லாளன் அதை வெட்டியிருப்பான். அதற்குள் பூதம் குதிரையின் மேல் பாய்ந்து முறுக்கிக்கொண்டது. வாயை ஆவென்று திறந்தது. அந்தச் சிறிது நேரத்தில் வல்லாளனே திண்டு மிண்டாடிப் போனான். பாம்பின் வாயிலிருந்து வரும் நெருப்புத் தன் மேல் படாதபடி

கேடயத்தால் மறைத்துக் கொண்டான். பாம்பு எழும்பி எழும்பி வாயைத் திறந்தபோது அதன் நெஞ்சு வல்லாளனுக்குத் தெரிந்தது. கேடயத்துக்குக் கீழே கையை வேகமாக நீட்டி வாளால் பாம்பின் நெஞ்சைக் கிழித்தான். முறுக்கின முறுக்குத் தளர்ந்து போய், பூதம் பொத்தென்று கீழே விழுந்தது. அதற்குள்ளிருந்த நெருப்பு அதன் உடம்பையே எரித்து விட்டது. வெறும் எலும்பும் சாம்பலுமாகப் பூதம் கீழே அவிந்து விட்டது.

இந்த வேடிக்கையை வெற்றியானந்தத்தோடு வல்லாளன் பார்த்தான். பிறகு குதிரையை நேரே தேனருவிக்கு விட்டான். அங்கே போய்த் தாகந்தீர இருவரும் தண்ணீர் குடித்தார்கள். அப்போது அங்கே அந்தப் பழைய கிழவன் வந்தான். "அடேடே, நல்ல குதிரையாக இருக்கிறதே!" என்று கத்தினான் அவன். கையில் குடமேந்திய அந்தப் பெண் குதிரையையும் வல்லாளனையும் பார்த்துப் பார்த்து மகிழ்ந்து போனாள்.

வல்லாளன் கண்கள் யாரையோ தேடின. வேறு யார்? தன்னுடன் அன்னக் குதிரைக்காகக் காத்துக் கிடந்தானே, அந்தச் சிறுவனைத் தான். அதற்குள் அவனே, "இதோ இருக்கிறேன்" என்று தன் கையில் நாலைந்து கூழாங் கல்லோடு ஓடிவந்தான். அவனிடம் பூதத்தை வென்ற கதையை வல்லாளன் சொன்னான். சிறுவன் மெதுவாக அன்னக் குதிரையைத் தட்டிக் கொடுத்தான். குதிரை அன்பு மிகுதியால் கனைத்தது.

சிறுவனுடன் குதிரையின் மேல் ஏறிக்கொண்டு கலிங்க தேசம் போனான் வல்லாளன். காலிங்கராஜனுக்கு முன்பே விஷயம் தெரிந்து விட்டது. அவன் ஒவ்வொரு நிமிஷமும் வல்லாளனை எதிர்பார்த்துக்கொண்டே இருந்தான். வல்லாளனைக் கண்டவுடன் அவனை அப்படியே கட்டிக் கொண்டான். சந்தோஷத்தால் கூத்தாடினான். "இந்த ராஜ்யத்தில் பாதி உனக்குக் கொடுக்கப் போகிறேன். எனக்கு ஒரு மகள் இருந்தால் உனக்குக் கல்யாணம் பண்ணிவைத்துப் பார்த்துச் சந்தோஷப் படுவேன். மகள் இல்லையே என்று தான் குறைப்படுகிறேன்" என்றான் காலிங்கராஜா.

"எனக்கு ஏற்ற பெண் ஒருத்தி இருக்கிறாள். அவளைத் தான் நான் கல்யாணம் பண்ணிக்கொள்ளப் போகிறேன்" என்றான் வல்லாளன்.

அவள் யார் தெரியுமா? ஆமாம்; தேனருவியிலே அவனுக்குத் தண்ணீர் கொடுத்தாளே, அந்த அழகிதான். அவளைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு, கலிங்க தேசத்தில் பாதியையும் பெற்றுக்கொண்டு ராஜனாகி விட்டான் வல்லாளன். அவனுடனே சந்தோஷமாக இருந்தான் அவனுடைய தோழனாகிய சிறுவன். அன்னக் குதிரையும் அவனோடே இருந்து வாழ்ந்தது.

# ஜக்கு

'ஆர்வி'

## இருளில்......

ஜக்கு எப்போதுமே இப்படித்தான். எதையாவது அவசரப்பட்டுக் கொண்டு சொல்வது. பிறகு அதைச் செய்வதற்குத் திண்டாடுவது. ஆனால் இன்று அவன் மாமி அவனைத் திண்டாடும்படி விடவில்லை. "எல்லாம் திங்கள் கிழமை ஊருக்குப் போகலாம்" என்று சொல்லி விட்டாள்.

அவனுடைய மாமாவும், "டேய், இன்னும் இரண்டு நாளில் 'கிளப்' பையன்கள் ஒரு டிராமா போடப் போகிறார்களாம். அதைப் பார்த்துவிட்டுப் போகலாம்" என்றார்.

ஜக்குவுக்குத் தன் ஊரிலும் இதேபோல் ஒரு 'கிளப்' ஆரம்பித்து டிராமாவெல்லாம் நடத்த வேண்டும் என்று எண்ணம். ஆகவே இந்த டிராமாவை அவசியம் பார்க்க எண்ணி, "என்ன டிராமாவாம், மாமா?" என்று கேட்டான்.

"இதோ பார் நோட்டீசை! யாரோ பையன்கள் கொண்டு வந்து வைத்துவிட்டுப் போயிருக்கிறார்கள் போலிருக்கிறது!" என்று அவனிடம் ஒரு பிட் நோட்டீஸைக் காண்பித்தார்.

"பள்ளிக்கூடத்துக்கு மட்டம்: ஒரு ஹாஸ்ய நாடகம். நடிகர்கள்: நந்து; 'உல்ப்'; கபாலி (சோனி); மற்றும் பலர். ஞாயிறு மாலை 5 மணிக்கு ஆரம்பம். கட்டணம்: அணா 4, 3, 2, 1."

இதைப் பார்த்ததும் ஜக்குவுக்கு ஆச்சரியமாய் இருந்தது; கோபமாக வந்தது. இதற்காகத்தான் 'உல்ப்'பும் சோனியும் வந்துவிட்டுப் போயிருக்கிறார்கள் என்று தெரிந்துகொண்டான். 'பார்த்தாயா, இந்த நந்துப் பயல் நம்மோடு கூடவே இருந்துகொண்டு, நாடகத்தில் நடிக்கப் போவதாகச் சொல்லவேயில்லையே' என்று வெறுப்பாகவும் இருந்தது.

இந்தச் சமயத்தில் ஜக்குவுக்கு ஒரு விஷயம் பளிச்சென்று ஞாபகத்துக்கு வந்தது: 'நந்து மட்டும் ரொம்ப நல்லவன் என்று எப்படிச் சொல்வது? எப்போது டெலிபோன் மணி அடித்தாலும் அப்போதெல்லாம் நந்து அவனுடன் இருப்பதில்லை. கடிதம் எழுதி வைத்திருப்பதும் நந்து இல்லாத சமயங்களில்தான். ஒருகால் இந்த நந்துவுக்கு அதில் பங்கு ஏதாவது இருக்குமோ? ஏன் இருக்கக்கூடாது? ஸ்விம்மிங் பூலில் இருந்தபோது டெலிபோன் வந்ததே - அப்போது வேறு யாரோ கூப்பிட்டார்களே?

ஜக்குவுக்குச் சந்தேகம் வலுத்துக்கொண்டே வந்தது. பல தடவை டெலிபோன் வந்த சந்தர்ப்பங்களையெல்லாம் நினைவு படுத்திப் பார்த்தான். சந்தேகமே இல்லை! அந்தச் சமயங்களில் நந்து இருப்பதில்லை!

நந்து இவ்வளவு தூரம் செய்யக் கூடியவனு என்று ஜக்கு யோசித்துப் பார்த்தான். ஹூம்; இந்தக் காலத்தில் யாரைத்தான் நம்ப முடிகிறது? 'பார்த்தால் பசு; பாய்ந்தால் புலி' என்பார்களே, அதுமாதிரி நந்து நாடக விஷயத்தைச் சொல்லாமல் மறைத்துத்தானே இருந்திருக்கிறுன்! இதைச் செய்தவன் என்னவெல்லாம் செய்திருப்பானே? பொம்மையைக்கூட அவனைத் தவிர வேறு யார் எடுத்து மறைத்து வைத்திருக்கப் போகிறுர்கள்?

'இருக்கட்டும். ஐயா கிட்டயா இவுரு வேலையைக் காட்டுருரு! பாக்கறேன் ஒரு கை!' என்று ஜக்கு தனக்குள் சொல்லிக் கொண்டான்.

வழக்கம்போல நந்து வந்ததும் அவனிடம் நாடகத்தைப்பற்றி ஒரு வார்த்தையும் பேசவில்லை. ஆனல் கையில் நோட்டீஸ் இருந்தது. நந்து அதைப் பார்த்துவிட்டு, "என்னடா ஜக்கு, அக்கிரமமாய் இருக்கு? என் பெயரையும் போட்டிருக்கானுகளே !" என்றுன்.

ஜக்கு கிண்டலாக, "நாடகத்தில் நடிக்கிறவனை நோட்டீஸில் போடாமல் இருப்பானு?" என்றுன்.

"எனக்குத் தெரியாமலா? என்னைக் கேக்க வாண்டாமா?"

"எதுக்காக உன்னைக் கேக்கணும்?"

"நான் போய் நடிக்கணுமோ, வாண்டாமோ?

"என்னைக் கேட்டால்?"

"நடிக்கறதுன்னு என்ன என்கிறதே தெரியாதே எனக்கு. என்னை அவமானப்படுத்தறத்துக்கு 'உல்ப்' இப்படிச் செய்திருக்கான்!"

ஜக்கு தலையைத் திருப்பிக் கொண்டு, "உனக்குத்தான் பிரமாதமா நடிக்கத் தெரியுமே! அவன் உன்னை அவமானப்படுத்




சங்கர்...

தருனே, நீ அவனை அவமானப் படுத்தறயோ, இல்லை இரண்டு பேருமாச் சேர்ந்து என்னை அவமானப் படுத்தறீங்களோ, போங்கள்!'' என்ருன்.

நந்து எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் ஜக்குவுக்கு அவனிடம் நம்பிக்கையே ஏற்படவில்லை. தனியாக இருந்தால் தான் ஜக்குவின் கோபம் தணியுமென்று நந்து தன் வீட்டுக்குச் சென்ருன்.

இந்த இரண்டு நாட்களுக்குள் டெலிபோனில் பேசுவது யார் என்று கண்டுபிடிக்க வேண்டும்; பொம்மையை எப்படி எடுத்துக்கொண்டு போனுர்கள் என்பதைக் கண்டு பிடிக்க வேண்டும்; இவ்வளவும் எதற்காகச் செய்கிருர்கள் என்றும் கண்டுபிடிக்க வேண்டும். ஜக்கு யோசனை செய்தான். வெகு நேரம் தன் புத்திக்கு எட்டின வரைக்கும் செய்ய வேண்டியவைகள் பற்றிப் பிளான் போட்டான். பிறகு அப்படியே அயர்ந்து தூங்கிப் போனுன்.

எழுந்திருந்தபோது அவன் தலைமாட்டில் ஒரு கடிதம் கிடந்தது: "மிஸ்டர் ஜக்கு அவர்களே! நந்து உண்மையானவன். உன் மாதிரி ஆபத்துச் சமயங்களில் திடீர் திடீரென்று பெரிய பெரிய புளுகாகப் புளுகித் தப்பித்துக் கொள்கிறவனல்ல. அப்படிப் பொய் சொல்லி நீ இதுவரையில் ஜயித்துவிட்டாய். இந்தக் கதை எப்போதும் பலிக்காது. அதனுல் நந்து ஒருவனிடமாவது உண்மையுடன் இரு."

ஜக்குவுக்கு இதைப் பார்த்ததும் சிரிப்புத்தான் வந்தது: "பயலே, இந்தப் புருடா வேலையெல்லாம் யாருகிட்ட? நம்மகிட்டயா நடக்கும்?... என்னை யாரென்று எண்ணினுய், பயலே!''. இது நந்துவின் வேலைதான் என்று அவனுக்கு நிச்சயமாகப் பட்டது. போதும் போதாததற்கு அவன் நம்பிக்கையை ஊர்ஜிதம் செய்ய இன்னெரு விஷயமும் நடந்தது.

பொம்மையை வாங்கும் போது ஜக்குவுடன் நந்து மட்டுந்தான் இருந்தான். அதன் விலை நந்துவுக்கு மட்டுமே தெரியும். ஆனுல் ராத்திரி, சாப்பிடும் போது அவன் மாமா அவனைப் பார்த்து, "என்ன விலைக்கு அந்தப் பொம்மையை வாங்கினுயடா?'' என்று கேட்டார்.

"ஐந்து ரூபாய்!'' என்று சட்டென்று பொய்தான் சொன்னுன் ஜக்கு. அவன் வேண்டுமென்று சொல்லவில்லை. வாய் தவறி வந்துவிட்டது.

மாமா சிரித்துக்கொண்டே மாமியிடம், "பார்த்தாயா, உன் மருமான் சாமர்த்தியத்தை! பத்து ரூபாய் பன்னிரண்டணுவுக்கு வாங்க வேண்டிய பொம்மையை ஐந்து ரூபாய்க்கு வாங்கியிருக்கிருன்! இல்லையாடா, ஜக்கு?'' என்ருர்.

ஜக்குவுக்கு முகம் சின்னதாகப் போய்விட்டது. அவ்வளவு விலை கொடுத்து வாங்கின பொம்மை தொலைந்து போய் விட்டது என்ருல் மாமா கோபித்துக் கொள்வாரே என்றுதான் விலையைக் குறைத்

துச் சொன்னான். ஆனால் இந்த நந்துப் பயல் மாமாவிடம் உண்மை விலையைச் சொல்லி விட்டான்போல் இருக்கிறது! எவ்வளவு அவமானம்?

"அது கிடக்கட்டும்; பாக்கி உன்னிடம் எவ்வளவு பணம் இருக்கு?"

இதற்குள் ஜக்குவின் மாமி வலை பீரோவிலிருந்து 'பாத் ரூமி'ல் கிடந்ததாக ஜக்குவின் மணிபர்ஸை எடுத்து அவனிடம் கொடுத்தாள்.

"மணிபர்ஸை இப்படித்தான் அஜாக்கிரதையாக வைத்துக் கொள்வதா? அதில் பணம் சரியாக இருக்கிறதா பார்!" என்றார் மாமா.

ஜக்கு மணிபர்ஸைத் திறந்து பார்த்தான். அதில் சரியாக இரு பத்திரண்டு ரூபாய் இருந்தன.

"பின்னே பொம்மைக்கு எப்படிப் பணம் கொடுத்தாய்?" என்று கேட்டார் மாமா.

ஜக்குவுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. "ஐயைய, பணம் கொடுக்க மறந்துட்டு வந்துட்டேன் போலிருக்கு, மாமா" என்றான்.

ஆனால் மாமாவா அவன் சொல்வதை நம்புவார்? கடகட வென்று சிரித்தார். இந்தப் பட்டணத்திலே எல்லாருமே இப்படித்தான் டெலிபோன் சிரிப்புமாதிரி கடகடவென்று சிரிப்பார்களோ என்று ஜக்கு வுக்குத் தோன்றிற்று.

"எண்டா, அந்தப் பொண்ணு பணம் அனுப்பியிருந்தாள் என்று சொல்றதுதானே?" என்றார் மாமா விடாமல்.

ஜக்குவுக்கு அவமானமாய் இருந்தது. "இல்லே மாமா, வந்து...வந்து... அந்தப் பொண்ணு...இல்லே, மாமா" என்று உளறினான். அவ னுக்கு நந்துவின்மேல்தான் ஆத்திரம் வந்தது.

மறுநாள் இரவு பத்துமணி இருக்கும். ஒரே இருட்டு. தூரத் தில் எங்கேயோ ஒரு நாய் குரைத்தது. மற்றப்படி எங்கும் நிச்சப்தம். ஜக்கு தூக்கம் கொள்ளாமல் இப்படியும் அப் படியுமாகப் புரண்டுகொண் டிருந்தான். 'எண்டாப்பா பட்டணத்துக்கு வந்தோம்?' என்றிருந்தது ஜக்குவுக்கு. திடீரென்று முதல் நாள் மத்தியான்னம் போட்ட பிளா னுக்கு ஒரு முடிவு உதய மாயிற்று அவன் மூளையில். அன்று முழுதும் அவன் நந்து வின் வீட்டுக்குப் போகவு மில்லை; அவனுடன் பேசவு மில்லை. நாளை நாடகத்தில் நந்து நடித்தால் ஜக்குவிடம் அவன் உண்மையாக நடந்துகொள்ள வில்லை என்றுதான் அர்த்தம். ஆனால் நந்து நடிக்கப் போகி றானா இல்லையா? அவனுக்கு என்ன ஆக்ட்? அந்த வேஷத் துக்குள்ள பாடங்களை நந்து படித்துவிட்டானா? இதெல்லாம் உடனே கண்டுபிடித்து விட வேண்டும் என்று ஜக்குவுக்குப் பட்டது. அதையும் தவிர அவன் மனசில் தனக்கும் ஒரு பார்ட் கிடைத்தால் நன்றாயிருக் குமே என்ற ஆசையும் உண் டாயிற்று. 'இவனுக கெஞ்சினா லும் நான் ஆக்ட் பண்ணப்

போறதில்லை. இருந்தாலும்—' என்று தனக்குள் விருப்பாகச் சொல்லிக் கொண்டான்.

நந்துவின் வீட்டில் அவன் அறை மேல் மாடியில் இருந்தது. அந்த அறையில் எங்கே என்ன இருக்கும் என்பது ஜக்குவுக்குத் தெரியும். நந்து வீட்டுக்குப் போய் அவன் விழித்துக்கொண் டிருந்தாலும் விழித்துக் கொள்ளாமல் இருந்தாலும் எப்படியும் எல்லாவற்றையும் தெரிந்துகொண்டு வருவது என்று முடிவு செய்தான். உடனே எழுந்திருந்து விளக்கைப் போட்டான். நீல நிஜாரையும் காக்கிச் சட்டையையும் அணிந்துகொண்டான். மெதுவாகச் சத்தம் போடாமல் அடிமேல் அடிவைத்துக் கதவைத் திறந்தான். விளக்கை மீண்டும் பழையபடி அணைத்து விட்டு வெளியில் புறப்பட்டான். வாசல் கதவுத் தாழ்ப்பாளைத் திறக்கும்போது பின்னால் ஏதோ சத்தம் கேட்டது. சட்டென்று சுவரோரமாய்ப் பதுங்கிக்கொண்டான். இருட்டில் யாரோ நடப்பது போன்ற காலடியோசை மட்டும் கேட்டதே தவிர வேறு ஒன்றும் தெரியவில்லை. அப்படியே மூச்சுக்கூட விடாமல் பத்து நிமிஷம்போல நின்று கவனித்தான். சத்தமில்லை. சிறிது நேரம் கழித்து மாமாவின் அறையில் தும்மல் சத்தம் கேட்டது. 'சரி, எல்லாரும் தூங்குகிறார்கள்' என்று ஜக்கு கதவைத் திறந்து சாத்திக் கொண்டு வெளிப்பட்டான்.

சிலுசிலு என்று காற்று வீசிக்கொண்டிருந்தது. நக்ஷத்திரங்கள் மின்னின. தெரு விளக்குகள் மங்கலாக எரிந்தன. ஆள் நடமாட்டமே இல்லை. ஜக்கு ஓரமாய் நடந்து சென்றான். நந்து வீட்டுக் காம்பவுண்டுக்குள் நுழையும்போது மெதுவாகத் திரும்பிப் பார்த்தான். திக்கென்றது!

அங்கே விளக்குக் கம்பத்தடியில் யாரோ ஒருவன் நின்றுகொண்டிருந்தான். ஜக்கு தோட்டத்துச் செடி நிழலில் பதுங்கிக்கொண்டான்.

திடீரென்று மாடியில் நந்துவின் அறையில் விளக்கு எரிந்தது. நந்து விழித்துக்கொண்டு தான் இருக்கிறான்போல் இருக்கிறது! 'சரி, நேராகவே போகலாமே' என்று ஜக்கு தோட்டப்பக்கப் படியருகில் வந்தான். அதற்குள் விளக்கு அணைந்து விட்டது. ஜக்கு தயங்கி நின்று வீட்டிலுள்ள மற்றவர்கள் தூக்கம் கெட்டு விடாதபடி மெதுவாக, "நந்து! டேய் நந்து!" என்று குரல் கொடுத்தான்.

பதில் இல்லை.

ஆனால் செடிக்குப் பின்னாலிருந்து யாரோ கனைத்துக் கொண்டே, "யாரது?" என்று கேட்டார்கள். ஜக்குவுக்குச் சர்வநாடியும் ஒடுங்கிவிட்டது. எதிரே, இருட்டில் வந்தவனுடைய கையில் ஒரு பெரிய தடி இருந்தது. அப்படியே திக்பிரமையடைந்து நின்றான் ஜக்கு.



# பொம்மைப் பள்ளிக்கூடம்

வாருங்கள்! வாருங்கள்!
வாருங்கள் பொம்மைகளே!
வரிசையாக வகுப்பினிலே
வந்துமுன்னே குந்துங்கள்!

பாருங்கள்! கேளுங்கள்!
படங்களெல்லாம் போடுங்கள்!
பாடிநல்ல கதைகளெல்லாம்
படித்துவிளை யாடலாம்.

'அ, ஆ' என்று சொல்லுங்கள்!
அணில், ஆடு பாருங்கள்!
அன்பான அழகுள்ள
பிராணியொன்று சொல்லுங்கள்.





'இ, ஈ' என்று சொல்லுங்கள்!
இலையில் அன்னம் உண்ணலாம்!
ஈ மொய்த்த பண்டங்கள்
ஈனம்என்றே தள்ளிடுவோம்.

'உ, ஊ' என்று சொல்லுங்கள்!
உரல், ஊசி பாருங்கள்!
உரலில் நெல்லைக் குத்திடுவோம்!
ஊசியாலே தைத்திடுவோம்!

'எ, ஏ' என்று சொல்லுங்கள்!
எலி, ஏணி பாருங்கள்
எலி வராத வீடுகட்டி
இன்பமாக வாழ்ந்திடுவோம்.

ஏணிமேலே ஏறி, ஏறி
எட்டாத நிலையெல்லாம்
எட்டிவிடப் பார்க்கலாம்
ஏறி ஏறிப் போகலாம்.

'ஐ' என்று சொல்லுங்கள்!
ஐந்துவிரல் எண்ணுங்கள்!
ஐப்பசி மாதத்தில் நாம்
தீபாவளி கொண்டாடுவோம்!

'ஒ, ஓ' என்று சொல்லுங்கள்!
ஒட்டகம் ஓணான் பாருங்கள்!
ஒட்டகத்தின் மீதேறலாம்
ஓணான் முகம் கோணலாம்.



'ஔ' என்று சொல்லுங்கள்!
ஔவையாரும் பாட்டிதான்
ஔவைசொல்லைக் கேட்கலாம்
வௌவாலைப் பார்க்கலாம்.

பாடங்கள் முடிந்ததென்று
பாடுங்கள் பொம்மைகளே
பள்ளிக்குக் காலையிலே
பண்புடனே வாருங்கள்.

# சம்பளப் பணம்

**கோவை - ராமசந்திரன்**

"கிட்டு, டேய்! போகலாமா! நேரமாச்சு!" என்று வாசலில் சத்தம் கேட்டதும் உள்ளிருந்து குதித்துக் கொண்டு ஓடிவந்தான் கிட்டு.

"இதோ! நான் ரெடி."

கையில் புஸ்தகங்களுடன் கிட்டுவும் மல்லிகாவும் ஸ்கூலுக்குப் புறப்பட்டார்கள்.

"கிட்டு! சம்பளப் பணம் கொண்டு வந்திருக்கியா?"

"அடாடா! மறந்து விட்டேனே! இதோ கொண்டு வந்து விடுகிறேன்."

பங்களாவினுள் சிட்டாய்ப் பறந்தான் கிட்டு. திரும்பிவரும் போது அவன் கையில் மூன்று புது ரூபாய் நோட்டுக்கள் இருந்தன.

"எங்கே, உன் ரூபாயையும் கொடு. நான் ஜாக்கிரதையாகக் கொண்டுவருகிறேன்" என்று மல்லிகாவின் இரண்டு ரூபாய்களையும் வாங்கி எல்லாவற்றையும் தன் ட்ரவுசர் பையினுள் போட்டுக்கொண்டான் கிட்டு.

சிரித்துப் பேசிக்கொண்டே இருவரும் ஸ்கூலுக்கு வந்து சேர்ந்தார்கள். மணி அடிக்க இன்னும் நேரம் இருந்தது. கேட்க வேண்டுமா? மற்ற மாணவ மாணவிகளுடன் கிட்டுவும் மல்லிகாவும் விளையாட ஆரம்பித்தார்கள்.

"டணர்...டணர்...டணர்...டணர்..."

எல்லாக் குழந்தைகளும் ஓரத்தில் வைத்திருந்த அவரவர் புஸ்தகங்களை எடுத்துக் கொண்டு வகுப்புகளை நோக்கி ஓடினர்கள். கிட்டுவும் தன் புஸ்தகங்களை எடுத்துக் கொண்டான்.

"மல்லீ, மல்லீ! இந்தா, உன் சம்பளப் பணத்தை வாங்கிக்கொண்டு போ!" என்று முன்னல் அவசரமாக ஓடிக் கொண்டிருந்த மல்லிகாவைக் கூப்பிட்டான் கிட்டு. இரைக்க இரைக்க ஓடிவந்த மல்லிகா, "சீக்கிரம் கொடுடா!" என்று துடித்தாள்.

"இதோ!" என்று ட்ரவுசர் பையில் கைவிட்ட கிட்டுவின் முகம் தேள் கொட்டியது போல் ஆயிற்று.

பையில் பணம் இல்லை; பை ஓட்டை! வண்ணன் கொண்டு வந்த ட்ரவுசரைக் கவனிக்காமல் அப்படியே போட்டுக் கொண்டு வந்திருந்தான். கிட்டுவுக்கு ஒன்றுமே தோன்றவில்லை.

மல்லிகா விஷயம் தெரிந்ததும் திக்பிரமை பிடித்

தவள் போல் ஆனாள். இருவரும் தேட ஆரம்பித்தார்கள். அவர்கள் விளையாடிய இடம் சிறியதுதான். ஆனால் என்ன தேடியும் பயனில்லை. மணி அடித்து நேரம் ஆகிவிட்டது. ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டு கையைப் பிசைந்துகொண்டு நின்றார்கள்.

"இன்று கடைசி நாள் அல்லவா! பணம் கட்டாவிட்டால் பெயர் அடித்துவிடுவார்களேடா!" என்று அழமாட்டாக் குறையாகக் கூறினாள் மல்லிகா.

"இதோ பார், மல்லீ; நீ வகுப்புக்குப் போ! நான் தேடிவிட்டு வருகிறேன். மத்தியான்னம் கட்டிவிடலாம். நாம் வரும் வழியில்தான் விழுந்திருக்கும்."

"ஆனால் நீ வகுப்புக்குப் போகவில்லையா?"

"காலையில் மட்டுந்தானே! போனால் போகிறது. லீவு போட்டுவிடுகிறேன்" என்று வந்த வழியாகத் தேடப் புறப்பட்டான் கிட்டு. மனத்தில் பெரிய பாறாங்கல்லை வைத்தது போல் இருந்தது. 'பட்-பட்-பட்' என்று அவன் இருதயம் பலமாக அடித்துக்கொண்டது.

* * *

கிட்டுவின் அப்பா பெரிய பணக்காரர். சிறிது முன் கோபக்காரர்; ஆனாலும் நல்லவர். பணத்தைத் தவறித் தொலைத்து விட்டதாகச் சொன்னால் முதலில் கோபித்துக்கொண்டாலும் பிறகு கொடுத்துவிடுவார். ஆனால் மல்லிகாவின் பணத்தையும் வாங்கி வைத்துக்கொண்டு தொலைந்து விட்டதாகச் சொன்னால் உதைதான் விழும். மல்லிகாவின் தந்தை, பாவம், ஓர் ஏழைக் குமாஸ்தா. மறுபடியும் சம்பளம் கொடுப்பது என்பது அவரால் முடியாத காரியம்.

வழியெல்லாம் தேடிக்கொண்டே வந்த கிட்டுவுக்கு வீட்டை நெருங்க நெருங்க மனத்தில் திகிலும் வேதனையும் அதிகமாயின. எல்லா இடங்களிலும் நன்றாகத் தேடினான். துருவித் துருவித் தன் கண்ணோட்டத்தை அங்கும் இங்கும் செலுத்தித் தேடினான். போன பணம் போனதுதான்.

கிட்டு ஒரு கல்லின்மேல் உட்கார்ந்து யோசித்தான். பையிலிருந்த புது 'பார்க்கர்' பேனாவைப் பார்த்ததும் திடீரென்று ஒரு யோசனை தோன்றியது. ஒரு மாதத்திற்கு முன் அவன் அப்பா வாங்கிக் கொடுத்த பேனா அது. அடுத்த நிமிஷம் அவன் கடைத் தெருவை நோக்கி ஓடினான்.

* * *

"ஏம்பா! பேனா ரிப்பேர்... இதை என்ன விலைக்கு எடுத்துக்கறே!"

சைனா பஜாரில் பேனா ரிப்பேர் செய்பவன் கிட்டுவை



ஏற இறங்கப் பார்த்தான். தன் மனத்திற்குள் ஒரு விஷமச் சிரிப்புச் சிரித்துக் கொண்டான். "இது என்ன தம்பி - பழைய பேனா; மெருகு பூசினியா! என்ன விலைக்குத் தருவே?" என்றான்.

"என்ன, பழசா? வாங்கி ஒரு மாசங்கூட ஆகல்லியே!"

"அதெல்லாம் கெடக்குப்பா! பத்து ரூவாயின்னா சொல்லு! அதுக்கு மேலே ஒரு தம்பிடி பெறாது இந்தப் பேனா!"

அவனுடன் வார்த்தையாடிக்கொண் டிருக்கக் கிட்டுவுக்கு நேரமேது? பொருள் கைமாறியது. பத்து ரூபாய் நோட்டுடன் பள்ளியை நோக்கி விரைந்தான் கிட்டு.

மாலையில் வீடு திரும்பும் போது கிட்டுவின் கையில் சாதாரண ஐந்து ரூபாய்ப் பேனா ஒன்று இருந்தது. இப்படி ஒரு வாரம் ஓடிவிட்டது. கிட்டுவின் அப்பா பேனாவைக் கவனிக்கவே இல்லை.

* * *

அன்று ஞாயிற்றுக்கிழமை. மத்தியான்னம் மணி இரண்டு இருக்கும். மாடியில் தன் அறையில் கணக்குப் போட்டு விட்டுக் கீழே ஹாலுக்கு வந்த கிட்டு, வாசலில் பேச்சுக் குரல் கேட்கவே ஜன்னல் வழியாக

எட்டிப் பார்த்தான். திண்ணையில் அவன் அப்பா யாருடனே உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார். பக்கத்தில் இருந்த பெட்டியைப் பார்த்ததும் கிட்டுவுக்குப் பகீரென்றது. அப்பாவுக்கு முன்னுல் இருந்தவன் அந்தப் 'பேனு ரிப்பேர் ஆசாமி'தான். பழைய பேனு ஒன்றை ரிப்பேருக்குக் கொடுத்துவிட்டுச் சாவகாசமாகப் பேசிக்கொண்டிருந்தார் அவன் அப்பா. பெட்டியில் உள்ள ஒவ்வொரு பேனுவாக அவர் எடுத்துப் பார்த்துக்கொண்டே வந்ததைக் கவனித்தான் கிட்டு.

பெட்டியின் ஓரத்தில் செருகியிருந்த தன் பேனுவைக் கண்டுபிடிக்க அவனுக்கு வெகு நேரமாகவில்லை. அவன் பேனு அவனுக்குத் தெரியாதா? 'பாவிப் பயல் - எங்கும் அதை விற்காமல் இந்த வீட்டுக்கே கொண்டுவந்து விட்டானே!' என்று மனசுக்குள் அவனைத் திட்டினுன் கிட்டு. திட்டி என்ன பிரயோஜனம்?

அப்பா அந்தப் பேனுவையும் கையில் எடுத்துவிட்டார். கிட்டுவின் நெஞ்சு 'திக் திக்' என்று அடித்துக்கொண்டது. அப்பா அடையாளம் கண்டு கொண்டால்-?

'ஐயையோ! அப்பா அதைத் திருப்பித் திருப்பிப் பார்க்கிருரே!'

"இந்தாப்பா! இதை என்ன விலையாளுத் தருவே?"

பேனு ரிப்பேர் செய்பவன் தன் கண்களை உயர்த்தினுன். "சார்! அது, ஒருவர் கேட்டார் என்று புதிதாகக் கம்பெனியிலிருந்து கொண்டுவந்தேன், சார்!"

"சரிதாம்பா! என்ன விலை?"

அப்பா பேரம் பேசுவதைக் கண்ட கிட்டு கலங்கிய உள்ளத்துடன் பார்த்துக்கொண்டே ஜன்னலுக்குப் பின்னுல் நின்று கொண்டிருந்தான்.

"சார், உங்க கிட்டே என்ன சார் சொல்லக் கெடக்கு! புது வெலெ ஐம்பத்துமூணு ரூபாய், சார்! ஐம்பது ரூபாய் கொடுங்க, சார்!"

அப்பா பார்த்தார். 'பேனு புதிதாக இருக்கிறது. வாங்கலாம்' என்று நினைத்தார் போலும்! "நாற்பது ரூபாய் தருவியா?"

"சார், இன்னும் இரண்டு ரூபாய் சேர்த்துக் கொடுங்கோ, சார்!"

கிட்டுவுக்கு அதற்குமேல் பொறுக்க முடியவில்லை. 'எவ்வளவு பொய் சொல்லுகிருன் அந்த ஆசாமி! என்னை ஒரு முறை ஏமாற்றியதும் அல்லாமல் என் அப்பாவையே மறுபடியும் ஏமாற்றப் பார்க்கிருனே!' என்று துடித்தது அவன் இளம் உள்ளம். அப்பா தன்னை அடிப்பார் என்பதையும் மறந்து வெளியே ஓடி வந்தான்.

"அப்பா, அப்பா! அது என் பேனுதான்! மூடிக்குள்ளே

வேண்டுமானாலும் பாரு! நீ செதுக்கி வந்த என் பெயர் இருக்கும்'' என்று கத்திக் கொண்டே வந்தான். மடமட வென்று நடந்த விஷயங்கள் அனைத்தையும் சொல்லி முடித் தான்.

விஷயத்தைக் கேட்ட அவன் அப்பா பேனாக்காரனைப் பார்த்தார். கிட்டுவைப் பார்த் ததுமே முதலில் அவன் பயந்து போனான். விஷயத்தைக் கூறியதும் வயிற்றில் புளி கரைத்தது போல ஆயிற்று அவனுக்கு. 'எங்கே நம்மைப் போலீசில் பிடித்துக் கொடுத்து விடுவார்களோ!' என்று திகில் ஏற்பட்டு விட்டது.

"சார், இந்த ஒரு தடவை மன்னித்துவிடுங்கோ, சார்! இனிமே சின்னப் பசங்க கிட்டே வியாபாரம் பண்ணி ஏமாத்தமாட்டேன், சார்!'' என்று கெஞ்சினான். பேனா வைத் திருப்பி வாங்கிக் கொண்டபின், கிட்டுவுக்கு அவன் கொடுத்ததற்கு மேல் இரண்டு ரூபாய் கொடுத் தனுப்பினார் அப்பா!

"டேய் கிட்டு! இனிமேல் இந்தமாதிரி செய்வதில்லை என்று பிள்ளையாருக்குப் பத் துத் தோப்புக்கரணம் போடு, போ!'' என்று சொன்ன அப்பாவை மனமார வாழ்த் திக்கொண்டு உள்ளே ஓடி னான் கிட்டு. பிள்ளையாருக் குப் பத்துக்கு இருப தாகத் தோப்புக்கரணம் போட்டுவிட்டுப் பேனாவுடன் வெளியே ஓடிவந்தான்.

"மல்லீ! மல்லீ!'' என்று அடுத்த வீட்டுக்கு ஓடிய அவன் மகிழ்ச்சியைக் கூறவா வேண்டும்?

## சாமர்த்தியக் குழந்தை

ஆண்ட்ரூ கார்னீஜி என்பவர் சின்ன வயசில் தம் அம்மா வுடன் ஒரு கடைக்குப் போனார்.

"உனக்கு வேண்டிய திராட்சைப் பழம் எடுத்துக் கொள்'' என்றார் கடைக்காரர்.

"மாட்டேன்'' என்று மறுத்துவிட்டார் கார்னீஜி.

கடைக்காரரே கை நிறையப் பழத்தை அள்ளிச் சிறுவ னின் குல்லாயில் போட்டுவிட்டார்.

வீட்டுக்கு வந்தபின், "ஏன் பழத்தை நீ எடுக்கவில்லை; உனக்கு அது பிடிக்காதா?'' என்று அம்மா கேட்டாள்.

"பிடிக்கும்; ஆனால், என் கையை விட அவர் கை பெரிசு. அதனால்தான் நான் எடுக்கவில்லை'' என்றார்.

இந்தக் கார்னீஜிதான் பின்னால் உலகப் பிரசித்தியடைந்த கோடீசுவரரானார். அதில் ஆச்சரியம் என்ன?

ச. கு. கணபதி ஐயர்

# சூரியன்

ஐரோப்பாவின் வடமேற்கே ஸ்காண்டிநேவியா என்று ஒரு தீபகற்பம் இருக்கிறது. மூன்று பக்கம் கடல் சூழ்ந்த தரைதான் தீபகற்பம் எனப்படும். அது மலைகள் அடர்ந்த பிரதேசம். கடல் ஓரத்திலேயே மலைகள் செங்குத்தாக இருக்கும். அந்தத் தீபகற்பத்தில் ஸ்வீடன், நார்வே என்று இரு தேசங்கள் இருக்கின்றன. இந்தத் தேசங்களிலே சில மாதங்கள் பகலிலும் இரவிலும் சூரியன் தொடர்ச்சியாகப் பிரகாசித்து வருவதுண்டு. இந்த இடத்தைப் பார்த்து வர ஒரு நாள் கீல் குதிரையில் ஏறிச் சென்றோம். சிறிது நேரத்தில் அந்த மாயக் குதிரை எங்கள் இருவரையும் நார்வே தேசத்துக்குக் கொண்டுபோய் விட்டது.

"சூரியன் இரவிலும் பிரகாசிக்கும் நாடு என்கிறார்களே! இந்தப் பட்டப் பகலிலும் இங்கே இருளாக அல்லவா இருக்கிறது!" என்றான் என் கூட வந்த ராமு.

"ஆமாம், என்னால் பனியையும் பொறுக்க முடியவில்லை. பள்ளம், ஆறு, குளம், மலை, மேடு, பள்ளத்தாக்கு எல்லாம் பனிக்கட்டி மூடியிருக்கிறது. வெள்ளை வெளேரென்று இருக்கிறது! என்றேன் நான்.

"இப்படி இருப்பது" பனிக் கட்டி அன்று; இதைத்தான் 'ஸ்னோ' என்பார்கள்" என்றான் ராமு.

அந்தச் சமயத்தில் இரண்டு சிறுவர்கள் ஒரு மலை உச்சியில் நிற்பதை அந்த மங்கிய இருட்டில் கண்டோம். எங்களைக் கண்டதும் அவர்கள் மலைச் சரிவின் வழியாகச் சறுக்கிக் கொண்டு ஒரு நிமிஷத்தில் எங்களிடம் வந்துவிட்டார்கள்! என்ன ஆச்சரியம் இது! அவர்கள் ஏதோ ஒருவிதமான தோல் சட்டையையும் நிஜாரையும் போட்டிருந்தார்கள். காலில் தோலாலான பூட்ஸ் இருந்தன. பூட்ஸ் அடியில் சரிவுகளில் சறுக்கி வருவதற்கு வசதியான மரக்கட்டை அமைத்திருந்தது. ஒவ்வொருவரும் இரண்டு இரண்டு தடிகளைக் கைகளில் வைத்திருந்தார்கள்.

இவர்கள் அவ்வளவு உயரத்திலிருந்து எப்படி இத்தனை சீக்கிரம் வந்துவிட்டார்கள் என்பது எங்களுக்கு ஆச்சரியமாய் இருந்தது. வந்தவர்கள் எங்களைப் பார்த்து, "நடக்கப்

# அஸ்தமிக்காத நாடு

பழகிய நாள் முதல் நாங்கள் இந்தப் பனிப் பிரதேசத்தில் சறுக்கவும் பழகிக்கொள்ளுகிறோம். சறுக்கிச் சறுக்கிப் பொழுது போக்குவது எங்களுக்கு ஒரு விளையாட்டு" என்று சொல்லிவிட்டு ஒரு முறை எங்களுக்குச் சறுக்கிக் காட்டினார்கள்.

சறுக்கத் தொடங்கும்போது ஒரு பாதத்தின் முன் மற்றொன்றை வைத்துக் கொண்டார்கள். முழங்கால்களை வளைத்துக்கொண்டார்கள். தடிகளை ஊன்றினார்கள். "இதோ பாருங்கள்: சறுக்கப் போகிறோம்" என்று சொல்லிவிட்டுச் சிறிது தூரம் சறுக்கிச் சென்றார்கள்.

"இது உங்களுக்கு நல்ல பொழுதுபோக்காக இருக்கலாம்; எங்களுக்குக் குளிர் அதிகமாக இருக்கிறது; பகல் நேரமாக இருந்தும் இருளாகவே இருக்கிறதே! இது இரவிலும் சூரியன் ஒளிரும் நாடு என்று கேள்விப்பட்டு வந்தோம்" என்றான் ராமு.

"நீங்கள் வந்திருக்கும் சமயம் பனிக்காலம் தொடங்கி விட்டது. ஆகஸ்ட் மாதம் ஆரம்பித்துவிட்டது அல்லவா? இனிமேல் பல மாதம் நாங்கள் வெளியே போகாமல் வீட்டோடு இருப்போம். வயல்களில் விவசாயம் இராது. வேலைக்காரரும் மாடுகளுங்கூட



ஸ்காண்டிநேவியா



ஸ்காண்டிநேவியப் பெண்கள்

வீடுகளில் அடைந்து இருக்கவேண்டும். ஏப்ரல் தொடக்கத்திலிருந்து இந்த நாட்டில் உள்ளவர்களுக்குக் குஷியான காலம்" என்று அவர்கள் சொல்லிவிட்டு எங்களைத் தங்கள் வீட்டுக்கு அழைத்துச் சென்றார்கள்.

செங்குத்தான மலை ஓரங்களில், உள்ளே தள்ளி, வீடு மரத்தால் அமைக்கப்பட்டிருந்தது. வீட்டின் நடுவில் கணப்பில் கட்டைகள் எரிந்து கொண்டிருந்தன. அதனால் குளிருக்கு அடக்கமாக இருந்தது.

நார்வே தேசத்துப் பெண்கள் வீட்டை எவ்வளவு சுத்தமாக வைத்திருக்கிறார்கள் என்பதை நாங்கள் அங்கே பார்த்தோம்.

சிறுவர்கள் தங்கள் வீட்டின் அறைகளை எங்களுக்குக் காட்டினார்கள். ஐந்து அல்லது ஆறு மாதத்துக்கு வேண்டிய உணவுப் பண்டங்கள், விறகு முதலியவற்றைச் சேகரித்துத் தனித் தனி அறைகளில் வைத்திருந்தார்கள். எதிரில் குளிருக்கு அடக்கமான மாட்டுத் தொழுவங்கள் இருந்தன. அங்கே பல சிறிய மாடுகள் கட்டியிருந்தன. இந்த மாடுகளை நாலைந்து மாதங்களுக்குத் தொழுவத்தைவிட்டு வெளியே கொண்டுவர மாட்டார்கள் என்று அவர்கள் சொன்னார்கள்.

அந்த வீட்டு அம்மாள் பெட்டியைத் திறந்து ரொட்டியைக் கொண்டுவந்து எங்களுக்குத் தட்டுகளில் பரிமாறினாள்.

"இந்த ரொட்டி எப்பொழுது செய்தது, தெரியுமா?" என்று அந்த அம்மாள் சிரித்துக்கொண்டே கேட்டாள்.

"காலையில் செய்ததாக இருக்கும்" என்றேன் நான்.

"இல்லை, நேற்றுச் செய்தது" என்றான் ராமு.

உடனே அந்த அம்மாள் சிரித்துக்கொண்டு, "இது செய்து இரண்டு மாதங்கள் ஆகின்றன. பார்த்தால் இன்று

செய்ததுபோலத்தானே இருக்கிறது? இந்தத் தேசத்தில் ஒருதடவை செய்த ரொட்டி மூன்று மாதமானாலும் கெட்டுப் போவதில்லை" என்றாள்.

வெண்ணெயும் பாலடைக் கட்டியும் ரொட்டியோடு தொட்டுக் கொண்டு சாப்பிட்டோம்.

பிறகு அந்தப் பையன்கள் எங்களுக்கு அந்த நாட்டின் கோடைக்காலத்தின் பெருமையைப் பற்றிப் பல கதைகளைச் சொல்லிக் கொண்டே இருக்க, வந்த களைப்பினால் நாங்கள் தூங்கிவிட்டோம். மறுநாள் என்பது இல்லாமல் நீண்ட நேரம் தூங்கினோம்.



பனிச் சறுக்கு வண்டி

மற்றொரு முறை ஏப்ரல் தொடக்கத்தில் நாங்கள் நார்வே சென்றோம். அதுதான் கோடைக்கால ஆரம்பம். பனிக்காலத்திலே புல்லோ பூண்டோ காணப்படாத இடம் எல்லாம் இப்பொழுது பச்சைப் பசேல் என்று பலநிற மலர்களோடு காட்சியளித்தன.

கோடைக்காலத்தில் ஜூலை வரையில் சூரியன் அஸ்தமனம் ஆகாமல் பிரகாசித்துக்கொண்டே இருக்கிறான். சிறுமிகள் வீட்டிலுள்ள பெண்களோடு மாடுகளை மேய்ச்சலுக்காக மலைப் பிரதேசங்களுக்கு ஓட்டிச் செல்கிறார்கள். அங்கேயே கல்லினால் குடிசைகள் அமைத்துக் கொண்டு கோடைக்காலம் முடியும் வரையில் தங்கியிருப்பார்கள். தினமும் மாடு மேய்ப்பது, பால் கறப்பது, பாலிலிருந்து வெண்ணெய் எடுப்பது, பாலடைக்கட்டி செய்வது இவை எல்லாம் சிறுமிகளும் பெண்களும் தனித்திருந்து செய்யும் வேலைகள். புல்லை வளர்த்து, அறுத்து, வெயிலில் காய வைத்து, வைக்கோல் ஆக்கி, வருகிற பனிக்காலத்துக்கு என்று வீடுகளுக்கு அனுப்புவதும் இவர்கள் வேலைதான்.

சிறுவர்கள் தம் பெற்றோருடன் தோட்டங்களில் வேலை செய்யப் போவார்கள். விவசாயம் பனிக்காலத்தின் பிறகு தொடங்கப்பட்டு மறுவருஷம் பனிக்காலம் ஆரம்பமாவதற்கு முன்பு முடிந்துவிடும்.

ரை (Rye), பார்லி என்ற தானியங்களையும் உருளைக்கிழங்கையும் அந்த நாட்டில் பயிர் செய்கிறார்கள்.

சில சிறுவர்கள் தகப்பனுருடன் படகுகளில் மீன் பிடிக்கச் செல்லுகிறார்கள். 'காட்லிவர் ஆயில்' என்னும் மீன் எண்ணெயைப் பற்றி நீங்கள் கேட்டிருக்கலாம். காட் என்பது ஒருவகை மீன். அந்த நாட்டில் அவை ஏராளமாக இருக்கின்றன. வலை வீசினதும் நிறைய மீன்கள் அகப்பட்டுக் கொள்ளுகின்றன. மூன்று மாதம் மீன் பிடித்து அவைகளைக் குவியல் குவியலாகக் குவித்துவிடுகிறார்கள்.

சிலர் மீன்களை உப்பிட்டு, வற்றலாக்கி அயல்நாடுகளுக்கு விலைக்கு அனுப்புகிறார்கள். மற்றும் பலர் காட்லிவர் எண்ணெய் செய்து வியாபாரத்துக்கு அனுப்புகிறார்கள். சிறுவர் எல்லாம் இந்தத் தொழில்களில் தகப்பனுருக்கு உதவியாக இருந்து வேலைகளைப் பழகிக் கொள்ளுகிறார்கள்.

இரவு நேரத்தில்கூடச் சூரியன் பிரகாசித்துக்கொண்டே இருப்பதனால் ஒவ்வொரு நாளும் தூங்குவது கொஞ்ச நேரமே. கோடைக்காலத்தில் இந்த நாட்டில் எங்கும் மகிழ்ச்சி காணப்படும்.

ரெயின்டீர் என்ற மான்களைப் பிடித்து வந்து வளர்க்கிறவர்களிடம் தோலை வாங்கி வந்து சட்டைகள் தைப்பதும் அவற்றை வியாபாரம் செய்வதும் ஒரு வேலை. வடக்கே கடலில் வெகு தூரம் சென்று திமிங்கிலங்களையும் ஸீல் என்ற பிராணிகளையும் வேட்டையாடிக் கொண்டுவருவது சிலருடைய வேலை. இந்த வேலைகளை எல்லாம் அந்த நாட்டுச் சிறுவர்களும் கற்றுக்கொள்ளுகிறார்கள். கோடைக்காலத்தில் பணக்காரக் குடும்பத்துச் சிறுவர் மட்டும் பள்ளிக்கூடங்களுக்குப் போய்ப் படித்து வருவதுண்டு.

உலகத்தில் இப்படியும் விசித்திரமான ஒரு தேசம் இருக்கிறது!



பனிச் சறுக்கு விளையாட்டு

# விடுமுறை வந்தால்

"விடுமுறை நான் வந்தால் நீங்கள் எங்கெல்லாம் போவீர்கள்?" என்று கேட்டதற்கு இதோ எட்டுக் குழந்தைகள் எழுதியிருக்கிறார்கள். அவர்கள் எழுதியபடியே இங்கே பிரசுரித்திருக்கிறோம்.



டி. ஜி. சுலோசனா, 13 வயது.



எஸ். சாந்தா, 13 வயது.

என் விடுமுறையில் நான் பல ஊருக்குச் சென்று அங்குள்ள இயற்கை காட்சியைக் காணலாம் என்று உத்தேசித்திருக்கிறேன். இன்னும் அநேக ஊர்களுக்குச் சென்று அங்குள்ள விக்கிரகங்களைப் பார்த்து மகிழ்ந்து அவற்றை செதுக்கிய கலைவாணரையும் போற்றலாம். நான் ரயிலில் செல்லும்போது இயற்கை இன்பத்தையே பார்த்தும் அவற்றைப் பற்றி பல கற்பனை பண்ணியும் சிந்தித்துப் பார்த்து உடனே எனக்குத் தோன்றும் கற்பனைகளை வியாசமாக எழுதுவேன். இவ்வாறு கழிந்த பின் இன்னும் அறிவுக்குகந்த அநேக கதைகளைப் பற்றி கேட்டும், படித்தும் என் நாட்களை கழிப்பேன்.

விடுமுறை நாட்களில் நான் சில நாட்களில் ஊருக்கு போவேன். பிறகு சில பிள்ளைகளுடன் விளையாடுவேன். பிறகு கடற்கரைக்கு போவேன். சில நாட்களில் சில சமயம் சினிமாவிற்கு போவேன். சில தினங்களில் கோவிலுக்குப் போவேன். பிறகு கச்சேரி நடந்தால் போவேன். பிறகு சில நாட்களில் சில சமயம் பாடப் புஸ்தகத்தை படிப்பேன் பிறகு தினந்தோறும் விளையாடுவேன். பிறகு சில வேடிக்கை கதைகளை சில சமயத்தில் படிப்பேன். பிறகு சில தெரிந்த பிள்ளைகளுக்கு சொல்லி கொடுப்பேன். சில நாட்களில் நிகழும் சில நிகழ்ச்சிகளை குறித்து குறிப்பு புத்தகத்தில் குறித்து கொள்வேன்.



என். பங்கஜம், 12 வயது.



ஸி. சரோஜா, 14 வயது.

நான் விடு நாளில் முதலாவது நான் ஊருக்கு போவேன். பிறகு சினிமாவுக்கும் பீச்சிக்கும் போவேன் பிறகு எங்கள் அத்தை வீட்டுக்கு போவேன். நான் விடுமுறை நாட்களில் என் சினேகிதி வீட்டுக்கு போவேன். நான் படங்களையும் அதற்கு பிறகு கிழிந்த துணிகள் இருந்தால் அதை எடுத்து தைப்பேன் சிறு பிள்ளைகள் இருந்தால் பணிவிடை செய்வேன். சிறு பிள்ளைகள் மாத்திரம் அல்ல. அப்பா அம்மா இவ்விருவருக்கும் கூட உதவி செய்வேன். அதற்கு பிறகு உயிர் காலேஜிக்கும் இறந்த காலேஜிக்கும் போவேன், மிருகக் காட்சி சாலைக்கும் போவேன். சர்க்ஸ் வந்தால் போவேன். நான் தினந்தோறும் குளித்து விட்டு அப்பா, அம்மா, அண்ணன் அக்காள் தங்கை தம்பி எல்லோரும் குளித்துப் பிறகு அவர் துணிகளை எல்லாம் நான் துவைப்பேன்.

எங்களுக்கு பரிஷி முடிந்ததும் லீவு கொடுப்பார்கள் நான் எங்கள் அத்தை விட்டிற்கு போகுவேன் நான் சினிமா இன்னும் மற்ற காஷிகளையும் நான் பார்போன் பிறகு அம்மாவிற்கு நான் கடிதம் எழுதுவேன் நான் அவ்வித்தில் சந்தோஷமாக இருப்போன் பிறகு நான் எங்கள் சித்தி இவ்விடத்தில் வந்து என்னை அழைத்துகொண்டு போனது எங்கள் அத்தை ஊரைவிட எங்கள் சித்தி ஊரு மிகவும் அழகவும் இருந்தது என்னை வாரத்திற்கு ஒருமுறை என்னை சுற்றி காண்பதற்கு அழைந்து செல்வார்கள். பிறகு நான் எங்கள் விட்டிற்கு வந்து விட்டுவிடுவார்கள் இரண்டு நாள் பிறகு பள்ளிக்கூடாம் திறந்தார்கள். எங்கள் விட்டில் உள்ளவார்கள் என்னை சினிமா இன்னும் மற்ற காஷிகளை போய் பார்போம் உயிர்காலேசிமிசியம் பார்க்கு இன்னும் இருக்கிற எல்லவார்ரையும் பார்போன்.



எஸ். சரோஜா, 13 வயது.



எஸ். ஜானகி, 13 வயது.

என் ஓய்வு நாட்களில் உபாத்தினிமார் கொடுக்கும் வேலையை செய்து முடிப்பேன். நான் எங்கள் பாட்டி வீட்டிற்குப் போவேன். நான் விளக்கு வைத்தவுடன் பாடுவேன். அங்கு அநேக தோட்டங்கள் இருக்கின்றன. நான் என் மாமாவுடன் சினிமாவுக்குப் போவேன். அவர்கள் வீட்டில் கதை புஸ்தகங்கள் இருக்கின்றன. அதை படித்து தம்பிக்கு சொல்லுவேன். ஒருநாள் நாங்கள் சிறிய சொம்பில் சமைத்து கறி செய்து விளையாடிவோம். ஒரு நாள் பொம்மைக் கல்யாணம் செய்வோம். அதற்கென்று காசு சேர்த்து பலகாரம் செய்து விளையாடுவோம். தாய் தந்தையாருக்கு கொடுக்கும்பொழுது அவர்கள் சிரிப்பார்கள். நானும், மற்றப் பிள்ளைகளும் ஒரு நாடகம் போடுவோம். நான் திரும்பி வரும் பொழுது அவர்களுக்கு அடையாளமாக ஒன்றைக் கொடுத்து விட்டுச் செல்லுவேன்.

விடுமுறை நாட்களை ஏன் கழிப்பாய்? ஏனென்றால் முழு வருடமும் படித்துவிட்டு கடைசியில் விடுமுறையில்கூட தொந்திரவு ஏற்படுகிறது என்ன இது என்ற எரிச்சல்கூட ஏற்படும். ஆகையால் நாம் விடுமுறை நாட்களில் நம்முடைய மனம் போனபடி சந்தோஷமாக கழிக்கலாம். நான் பல ஊர்களுக்குச் செல்வேன். நான் பல ஊர்களுக்குச் சென்றால் அங்குள்ள இயற்கை காட்சி செயற்கைக் காட்சி முதலியவற்றைப் பார்த்துச் சந்தோஷம் அடையலாம். அங்குள்ள தொழில், பேச்சு நடக்கை முதயவற்றை அறியலாம். நாம் பல இடங்களுக்குச் சென்றால்தான் நமக்கு அறிவு விருத்தி அடையும். நான் விடுமுறையில் எனது வேலைகளை காலந்தவறாமல் (Punctual) செய்வேன். எப்படியோ சமயத்திற்குத் தகுந்தவாறு பார்த்துக்கொள்ளுவேன்.



எஸ். ராஜம், 14 வயது.



டி. ராம்பாய், 13 வயது.

நான் விடுமுறை விட்ட அன்றே மறுநாளோ கிளம்பி என் பாட்டி ஊர் காவேரிபூம் பட்டிணம் போவேன். அங்கு பல கதைகளை படிப்பேன். எங்கள் பாட்டி வீட்டில் 5 கன்று குட்டிகள் இருக்கின்றன. அதை ஓட விட்டு அதை பிடிப்பேன். பத்திரிக்கைகளை படித்து விஷயங்களை அறிந்துகொள்வேன். எனக்கு தெரிந்த கைவேலைகளை செய்து என் பாட்டி, மாமா, மாமி முதலியவர்களிடம் காண்பிப்பேன். கடலுக்கு செல்வேன். பெண்களுடன் விளையாடுவேன். பான்டி காரம் போட், பல்லாங்குழி, இன்னும் பலவிதமான விளையாட்டுகளையும், தேக பயிற்சிகளையும் செய்வேன். இரவு வேளைகளில் எனக்கு தெரிந்த கதைகளை பிறர்கு சொல்லியும் அவர்களுக்கு தெரிந்த கதைகளை எனக்கு சொல்லியும் செய்வேன்.

என் விடுமுறை நாளில் ஊருக்குப் போவேன். அங்கு பல கதைகள், கட்டுரைகள் படிப்பேன். படித்து என் அம்மாவிடம் அப்பாவிடம், அண்ணனிடம், அந்த கதையை சொல்வேன். பல விளையாட்டுகளும் ஆடுவேன். சில கதை புஸ்தகங்கள் படித்து அதில் என்ன நாடகங்கள் இருக்கிறது என்று, படித்து பிறகு பல பிள்ளைகளும் நானும் அந்த நாடகத்தில் சேர்ந்து நாடகங்கள் போடுவோம். பல கச்சேரிகளுக்கும் போவேன். நான் எந்த நாடகத்தை போடுவேன் என்றால் சிலர் படிக்காதவர்களாய் இருக்கிறார்கள் அவர்களுக்கு படிப்பை பற்றியும். சுத்தத்தை பற்றியும், உபகாரத்தைப் பற்றியும் சில நாடகங்களை போடுவேன். பிறகு திருக்குறள் படிப்பேன். கடற்கரைக்கு சென்று அலைகள் எங்கிருந்து வருகிறது என்பதை பற்றியும் என் அப்பாவிடம் கேட்பேன்.

# கண்ணன் கழக அங்கத்தினர்கள்

(S) 49. சங்கரன், S., ஆர். எஸ். புரம். 50. சாந்தா, K. R., கும்பகோணம். 51. சக்திவேல், V. S., யாழ்ப்பாணம். 52. ஸ்ரீநிவாஸன், V. K., திருவாரூர். 53. சுகவனம், R.; மயிலாப்பூர். 54. சந்தானம், ரா., வேப்பேரி. 55. ஸ்ரீநிவாஸன், S., மேட்டுப்பாளையம். 56. ஸ்ரீநிவாஸன்; R., பஸவங்குடி. 57. சீதா, P., கோட்டூர். 58. சுபத்ரா, அ., பங்களூர். 59. சரோஜா, S,, மாதுங்கா. 60. சண்முகம், தி. அ., திருவண்ணாமலை. 61. ஸ்ரீநிவாஸன், P., திருநெல்வேலி. 62. சாந்தலக்ஷ்மி; S., மயிலாப்பூர். 63. சுடலைமுத்து, மீ., திருநெல்வேலி. 64. சின்னையா, K., கொழும்பு. 65. ஸ்ரீநிவாஸன், டி., அல்சூர். 66. சுப்பிரமணியன், திண்டிவனம். 67. சுந்தரம், T. R., சாமராஜபேட்டை. 68. சிவராமகிருஷ்ணன், கோவை. 69. ஸ்ரீராமுலு, ஏ., ராயபுரம், சென்னை. 70. சாமிநாதன், ஐ., மயிலாப்பூர். 71. சேதுராமசாமி, அரு., ஆத்தங்குடி. 72. சுந்தரமூர்த்தி, S., மயிலாப்பூர். 73. சதானந்தன், க., காரைநகர். (T) 9. தங்கராசு, அ., மேட்டுப்பாளையம். 10. திருஞானசம்பந்தம், R., திருவாரூர். 11. தங்கவேல், T. A., திருச்செங்கோடு. 12. தியாகராசன், R. M., செவ்வாய்ப்பேட்டை, சேலம். (U) 1. உமாதேவி, A., சாத்தூர். (V) 18. வள்ளியம்மாள், D., மேட்டுப்பாளையம். 19. வேங்கடாசலம், D., மயிலாப்பூர். 20. வரதராஜன், B., மேற்கு மாம்பலம். 21. வேங்கடரத்னம், S., வேல்கண், S., விழுப்புரம். 22. வேதாம்பாள், P., அறந்தாங்கி. 23. வசுமதி, சி., சிதம்பரம். 24. வேங்கடேசுவரன், S., நாட்டரசன்கோட்டை. 25. விசாலாக்ஷி, S., குருவிக்குளம். 26. வசந்தா, R., வத்ஸலா. R., சாரங்கராஜன், ராஜகோபாலன், சென்னை, 14. 27. விசுவநாதன், A., ஆலப்புழை. 28. வேலையா, T. S., குமார் T. S. சென்னை, 2. 29. வடிவேலு, D., மயிலாப்பூர். 30. வனிதாமணி, ச., ராதாமணி, ச., மொரட்டுவ. (Y) 2. யோகநாதன், K., மயிலாப்பூர். (A) 18. அருணாசலம், M. S., மோகனூர்; 19. ஆறுமுகம், K., புதுக்கோட்டை; 20. அன்வர்பாக்ஷா, S., திருவள்ளூர்; 21. அனந்தன். வெ., பார்வதி, சென்னை 6; 22. ஆறுமுகம், C. N., கோவை; 23. அப்துல் கபூர், N., ஆயப்பாடி; 24. அப்பிச்சிக் கவுண்டன் A. K., கவுந்தப்பாடி; 25. ஆறுமுகம், A.,

இங்கே கத்தரியுங்கள்.

---

**கண்ணன் கழகம்**

**அங்கத்தினர் பதிவு கூபன்**

(கட்டணம் இல்லை)

பெயர் ......................

விலாசம் ......................

......................

பிறந்த தேதி ......................

(தேதி, மாதம், வருஷம்)

மே '50 கூபன் நெ:

கோபி; 26. ஆறுமுகசாமி, L., சாத்தூர்; 27. அப்துல் கரீம், I., கூனூர்; 28. அனந்தயன், சோ., ஜயமணி, திருமங்கலம்; 29. ஆனந்த கிருஷ்ணன், R., சின்ன சேலம்; 30. அசோகன், V. M., (ஊர் எழுத வில்லை.) 31. அனந்தராமன், R.C., திண்டிவனம். 32. ஆறுமுகம், K., (ஊர் தெரியவில்லை.) 33. ஆறுமுகம் M. K., ஷண்முகம், M. K., ஸ்ரீ ராமபுரம். 34. அண்ணாமலை, கு., இராங்கியம்; 35. அபர்ணா, T. K., பாடி கிராமம்; 36. அருணாசலம் K., ஆண்டிப்பட்டி; 37. அப்துல் ஜபார், S. I., கண்டி; 38. அழகிரி, S., திருக்கோவிலூர்; 39. அர்ஜுனன், D., ஷோலிங்கர். 40. அப்புசாமி, T. M., தாரமங்கலம்; 41. அருணா சலம், கி., விருத்தாசலம்; 42. ஆண்டாள், பி., திருவனந்தபுரம். (B) 22. பாலசுப்பிரமணியன், S., கண்ணம்மாள், S., சென்னை 6. 23. பாலசுப்பிரமணியன், S., வில்லிவாக்கம்; 24. பாலசுப்பிரமணியன், S. தளவாப்பட்டி; 25. பாலசுப்பிரமணியன், P., சென்னை 1. 26. பாலசுப்பிரமணியன், K., எடப்பாடி; 27. பாலகிருஷ்ணன், A., சென்னை 1. 28. பாலகிருஷ்ணன், E. S., கோவை. 29. பாலகிருஷ்ணன், V., வைத்தியநாதன், V., தலையத்தூர்; 30. பாலகிருஷ்ணன், W. V., மதராஸ், 14; 31. பாலகிருஷ்ணன், N. R., மணலூர்பேட்டை; 32. பாஸ்கரன், ஆர்., ஜம்ஷெட்பூர்; 33. பாஸ்கரன், P., பணகுடி; 34. பலராமன், D., ஈரோடு; 35. பாபு, A., ராதாகுமார், A., பம்பாய்; 36. பெத்து செட்டி, Ch., துறையூர்; 37. பாலசுப்பிரமணியன், G., துறையூர்; 38. பாலசுப்பிரமணியன், M., ஆண்டிப்பட்டி; 39. பாலசுப்பிரமணியன், A., நாகூர்; 40. பாலசந்திரன், C., தங்கமணி, C., புதுடில்லி; 41. பானுமதி, D. R., ஓசூர், சேலம்; 42. பால்சுப்பிரமணியன், சி., அனந்த சங்கரன், சி., ஆலப்புழை; 43. பாலகிருஷ்ணன், கு., இறக்குவானை; 44. பால்கனி, D, ஆண்டிப்பட்டி; (C) 10. சந்திரசேகரன், ஸ்ரீ., சாந்திநிகேதனம்; 11. சிதம்பரம், ப., திருவனந்தபுரம்; 12. சேர்மன்துரை, ஈ., பேட்டை; 13. வ. உ. சிதம்பரனர் புட்பால் கிளப், திண்டுக்கல்; 14. சார்ல்ஸ் எட்வர்டு ஹாலிடே, மயிலாப்பூர்; 15. சின்னக்களி, ஆ., மதுரை; 16. சின்னதம்பி, தளவாய்ப்பட்டி; 17. கிருஸ்ற்றி ஜயரத்தினம், யாழ்ப்பாணம்; 18. சந்திரிகா பிரியதர்சினி, ஆர்., (சகோதரிகள்) சென்னை 16. 19. சாருமதி, வேதாசலம், ஆர்., சென்னை 17; 20. சந்திரன், எம்.வி., திருவள்ளூர்.

(மீதி அடுத்த இதழில் வெளியாகும்)

★★★★★★★★★★ ★★★★★

# கண்ணன்

மாதந்தோறும்

இங்கிலீஷ் 1-ஆம் தேதி

வெளிவரும்

★★★★★★★★★★ ★★★★★

# எலி ராஜகுமாரி

'சோமசன்மா'

சீன தேசம் உங்களுக்குத் தெரியும் அல்லவா? அது தான், சீன வெடி, பட்டாஸ் எல்லாம் வருகிறதே அந்தத் தேசந்தான். அந்தச் சீன தேசத்தில் வெகு காலத்துக்கு முன்னால் ஓர் எலி ராஜ்யம் இருந்தது. அந்த எலி ராஜ்யத்துக்கு ஒரு ராஜா இருந்தார். அவரும் ஓர் எலி தான்; பெரிய எலி. அந்த எலி ராஜாவுக்கு ஒரு மகள்; எலி ராஜகுமாரி.

அந்த எலி ராஜாவுக்குத் தன்னுடைய மகளைப்போல் அழகானவள் இந்த உலகத்திலேயே யாரும் கிடையாது என்று ரொம்பக் கர்வம். அதனால் அந்த எலி ராஜா என்ன நினைத்தது: 'எப்படியானாலும் நம்முடைய பெண்ணை மிகமிக உயர்வான ஒருவருக்குத்தான் கல்யாணம் செய்து கொடுக்க வேண்டும். என்ன வானாலும் இந்த எலிப் பயல்களுக்குக் கொடுப்பதில்லை!'

இது அந்த எலி ராஜாவின் பெண்டாட்டிக்குப் பிடிக்க வில்லை "இதோ பாருங்கோ! நம்ம ஜாதியிலேயே எத்தனையோ பிள்ளைகள் இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் விட்டுவிட்டு இப்படி உலகத்தில் சேராதபடி நினைப்பது எனக்குப் பிடிக்கவில்லை" என்று அந்த எலி ராணி சொல்லிற்று.

எலி ராஜா: நீ சுத்த முட்டாள்! உனக்கு என்ன தெரியும்? வெறும் வறட்டுத் தானியத்தைக் கொறிக்கும் எலிப் பயலுக்கு என் பெண்ணைக் கொடுக்கமாட்டேன்!

எலி ராணி: நம்ம குழந்தை என்னதான் அழகாயிருந்தாலும் எலி எலிதானே? அதை வேறு யார் கல்யாணம் பண்ணிக்கொள்வார்கள்?

எலி ராஜா: உன்னைக் கேட்கவில்லை! போ, அடுப்பங்கரைக்கு! இது விஷயத்தில் நீ தலையிட்டாயோ நான் பொல்லாதவனாயிருப்பேன்!

தன் பெண்டாட்டியை அனுப்பிவிட்டு எலிராஜா பின்வருமாறு யோசனை செய்தது: 'உலகத்திலேயே மிக உயரமாயிருப்பவன் மனிதன்; அவனை விட உயரம் பனைமரம்; அதை விட உயரமாயிருப்பது மலை; மலையைவிட உயரம் எது?'

மலையைவிட உயரமானது என்ன என்று தெரியவில்லை. தன்னுடைய சபையில் உள்ள மந்திரிகள், பிரதானிகள்,



வேலைக்காரர்கள், காவற்காரர்கள் எல்லாரையும் கூப்பிட்டு, "மலையைவிட உயர்ந்தது எது?" என்று கேட்டது. சில பேர், "மாமரம்" என்றார்கள்; சிலர், "சமுத்திரம்" என்றார்கள். சிலர், "ஆகாயத்தில் பறக்கும் குருவி" என்றார்கள்.

எலி ராஜாவுக்குத் திருப்தி ஏற்படவில்லை. கடைசியில் ஒரு கிழட்டு எலி சொல்லிற்று: "உலகத்தில் உள்ள எல்லாரையும்விட உயர்ந்தவன் சூரிய பகவான்தான். அவனே சகல ஜீவராசிகளுக்கும் உயிர் கொடுக்கிறான்."

அதைக் கேட்ட எலி ராஜா, "இதோ என் மகளுக்குத் தகுந்த மாப்பிள்ளையைக் கண்டுபிடித்துவிட்டேன்!" என்று ஆனந்தத்தால் கூத்தாடிற்று. வந்தவர்களுக்கெல்லாம் அரண்மனையில் தடபுடலாய் விருந்து வைத்தது. நாட்டியக் கச்சேரியெல்லாம் வைத்தது.

இப்படியாக, சூரிய பகவானை மாப்பிள்ளையாகப்

பொறுக்கிய எலி ராஜா மாப்பிள்ளையைக் கண்டு பேசி முடித்துவரக் கிளம்பிற்று. ரொம்ப நாள் வழி நடந்து போய் ஒரு கடற்கரையை அடைந்தது. அங்கே மிக உயரமான ஒரு மலை இருந்தது. அதன் உச்சியில் போய்ப் பரிவாரங்களுடன் தட்டில் வெற்றிலை பாக்கு, வாழைப்பழம் எல்லாம் வைத்துக்கொண்டு நின்றது.

அதிகாலையில் சூரிய பகவான் தம் ரதத்தில் ஏறி உலகத்தைச் சுற்றக் கிளம்பினார். எலி ராஜா அவரை வழிமறித்து, சாஷ்டாங்கமாக நமஸ்காரம் பண்ணி, "பகவானே! உலகத்திலேயே மிகவும் உயர்ந்த ஒருவருக்கு என்னுடைய மகளைக் கல்யாணம் செய்து வைக்க வேண்டும் என்று தீர்மானித்திருக்கிறேன். தங்களைவிட உயர்ந்தவர் யாரும் இல்லை. ஆகையால் தாங்கள் சம்மதிக்க வேண்டும். இந்தச் சித்திரை மாதத்துக்குள்ளேயே விவாகத்தை முடித்துவிடலாம்" என்றது.

எலி ராஜாவின் பேச்சைக் கேட்ட சூரிய பகவானுக்குச் சிரிப்புச் சிரிப்பாக வந்தது. சிரிப்பை அடக்கிக்கொண்டு கேட்டார்: "அப்பா எலி ராஜா! உன்னுடைய மகள் அழகாயிருப்பாளா? அவளுக்கு எத்தனை வயசு?"

"பகவானே! என் பெண் என்பதற்காக நான் சொல்லவில்லை. அவளைப் போல அழகும் சாமர்த்தியமும் உள்ள பெண் இந்த உலகத்திலேயே இல்லை. நீங்கள் வேண்டுமானால் பாருங்கள்!" என்று எலி ராஜா கூறிற்று.

அப்போது சூரிய பகவான் சொல்லுவார்: "அப்பனே! நீ சொல்லும்போது எனக்கு நம்பிக்கைதான். ஆனால் உன்னுடைய பெண்ணுக்குத் தகுந்த



புருஷன் நான் இல்லே. ஏனென்ருல் என்னைவிட உயர்ந்தவன் ஒருவன் இருக்கிருன். அவனுக்குப் பேர் மேகம். அவன் உனக்கு முன்னுல் வந்தால் நான் இருக்கும் இடம் தெரியாது. ஆகையால் அவன் தான் என்னைவிடப் பெரியவன். இதோ வருகிருன் பார். அவனைப் போய்ப் பிடி!" என்று சொல்லிவிட்டு, சூரிய பகவான் ரதத்தின்மேல் ஏறிப் போய் விட்டார்.

அப்போது அங்கே ஒரு மேகம் வந்து மலை உச்சியில் உட்கார்ந்தது. மேகத்தைக் கண்டதும் சூரியன் இருக்கும் இடமே தெரியவில்லை. எலி ராஜாவுக்கு, சூரியன் சொன்னது உண்மைதான் என்று தோன்றிற்று. உடனே மேகத்தின் முன்னுல் போய், பழைய படியே சொல்லிற்று.

அதைக் கேட்ட மேகம் கடகடவென்று சிரித்து, "அப்பா, எலியே! என்னை ஒரு பெரியவனுக நினைத்து வந்ததற்குச் சந்தோஷம். ஆனுல் என்னைவிடப் பெரிய மனுஷ்யன் இதோ வருகிருன் பார்!" என்றது. அப்போது அங்கே ஒரு காற்று வேகமாக அடித்தது. மேகம் எழும்பிக்கொண்டே, "நான் போய்வருகிறேன், எலியப்பா! காத்தவராயரைப் பார்த்துப் பேசி முடித்துக்கொள்" என்று சொல்லிப் பறந்து சென்றது.

எலி ராஜா பார்த்தது. "காத்தவராயரே! காத்தவராயரே! கொஞ்சம் நில்லும்! நான் சொல்வதைக் கேளும். இப்படி ஓடினுல் எப்படிப் பேசுவது?" என்று கையில் தட்டுடன் காற்றைத் துரத்திக் கொண்டு ஓடிற்று.

காற்று சற்று நின்று, "யாரடா நீ! என்ன வேணும் உனக்கு?" என்றது.

எலி சொல்லும்: "ஐயனே! சூரிய பகவான்தான் உயர்ந்தவர் என்று வந்தேன். அவர் மேகத்தைக் காட்டினுர். மேகமோ தங்களைக் காட்டிற்று. தாங்கள்தான் தயவு செய்யவேண்டும்."

காற்று: எதற்கு?

எலி ராஜா: கல்யாணத்துக்கு!

காற்று: யார் கல்யாணம்?

எலி ராஜா: என் மகளுக்குத் தான். உங்களுக்குத் தெரியாதா? அவளைப்போல் அழகான பெண் எங்குமே கிடையாது. தாங்கள் தயவு செய்யவேண்டும்!

அதைக் கேட்ட காற்று, "ஹா ஹா ஹா" என்று சிரித்தது. எலி ராஜா, "ஏன் சிரிக்கிறீர்கள்?" என்றது.

காற்று, "மேகத்தைவிடப் பெரியவன் நான் என்பது உண்மைதான். ஆனுல் என்னைவிடப் பெரியவன் ஒருவன் இருக்க, என்னிடம் வந்தாயே?" என்று சொல்ல, எலி ராஜா, "அது யார்?" என்று கேட்டது.

"அப்பனே எலி! உங்கள் ஊருக்குப் பக்கத்தில் உள்ள கோட்டைச் சுவர் இருக்கிறதே, அதுதான் என்னை விடப் பெரியது. நான் என்னதான் வேகமாக அடித்தாலும் அதனிடம் மட்டும் என்னுடைய பாச்சா பலிக்காது. அப்படிப்பட்ட பலசாலிக்கு அல்லவா உன் மகள் வாழ்க்கைப்பட வேண்டும்?" என்றது காற்று.

இதைக் கேட்ட எலி ராஜா உடனே பரிவாரங்களோடு கிளம்பிக் கோட்டை வாசலை அடைந்தது. வெகு நேரம் மேளதாளங்களுடன் சத்தம் செய்தபின், சுவர் மெதுவாகத் தூக்கம் கலைந்து தலையைத் தூக்கிப் பார்த்தது.

எலி ராஜா மடமடவென்று ஆதியோடந்தமாய் நடந்தவைகளை யெல்லாம் சொல்லி, "இப்போது உங்கள் தயவில் தான் மகள் கல்யாணம் நடக்க வேண்டும்" என்றது.

மதில்சுவர் மெதுவாக உடம்பை வளைத்து, "அப்பா, எலிராஜா, தயவு செய்து கீழே என் காலடியில் குனிந்து பார்" என்றது.

எலி ராஜா குனிந்து பார்த்தது. அங்கே என்ன இருந்தது என்று நினைக்கிறீர்கள்? ஓர் எலிப் பையன் மதில்சுவருக்கு அடியில் குடைந்துகொண் டிருந்தான்.

எலி ராஜாவுக்கு ஒன்றும் புரியவில்லை. அப்போது மதில் சுவர், "பார்த்தாயா இதை? எவ்வளவு பெரிய சைன்யம் வந்து அணுக்குண்டு போட்டாலும் என்னை அசைக்க முடியாது. ஆனால் இந்தப் பொடிப் பயல் ஒரு நொடியில் என் காலைக் குடைந்துவிடுகிறான். இப்போது நீயே சொல்லு. நான் பெரியவனா? அவன் பெரியவனா?" என்றது.

தன் ஜாதிக்காரப் பையனை விட உயர்ந்த மாப்பிள்ளை உலகத்தில் கிடையாது என்ற விஷயம் எலி ராஜாவுக்கு அப்போதுதான் விளங்கிற்று.

அப்புறம் என்ன? எலி ராஜகுமாரிக்கும் எலிப் பையனுக்கும் நல்ல முகூர்த்தத்தில் தடபுடலாக விவாகம் நடந்தேறியது.



ஆகையினால், பிள்ளைகளே! யாராயிருந்தாலும் தங்கள் மகளைச் சுய ஜாதியில் கல்யாணம்செய்து கொடுப்பதை விடச்சிறந்தது ஒன்றுமில்லை என்பது இதனால்தெரிகிறது அல்லவா?

# பவழவல்லி

கி. ரா.



## 5
## விசாரணை

அந்தச் சிலை உருவமான ராஜகுமாரியைப் பார்த்துக்கொண்டே சுந்தரம் நிற்கும்போது, தொலை தூரத்தில் சங்கு ஊதுவதைப் போன்ற சத்தம் கேட்டது. வரவர அந்தச் சத்தம் கிட்டத்தில் கேட்டது.



சுந்தரம் பயத்துடன் அந்தப் படுக்கை அறையை விட்டு வெளியில் வந்து நாலு பக்கமும் பார்த்தான். அந்த ஹாலுக்கு வெளியில், திடுதிடென்று பத்துப் பேர் வரும் காலடிச் சத்தம் கேட்டது. உடனே ஓடிப்போய் ஒரு தூணுக்குப் பக்கத்தில் வைத்திருந்த பூச்செடிக்குப் பின்னால் மறைந்துகொண்டான்.

கதவு திறந்தது. இரட்டை வரிசையாக ஆறு சிப்பாய்கள் உள்ளே நுழைந்தார்கள். அவர்களுக்குப் பின்னால் ஒரு மச்சப் பெண் நவரத்தினக் குடை பிடித்துவர, அதன் கீழ் ஓர் அரசன் வந்தான். அவனுடைய தலையில் ஒரு பவழக் கிரீடம் இருந்தது. சிறு சிறு பவழங்களையும் முத்துக்களையும் கோத்து செய்த ஆடைகளை அவன் அணிந்திருந்தான். அந்தக் குடைதான் சுந்தரத்துக்கு ஆச்சரியமாய் இருந்தது. அதிலுள்ள நவரத்தினங்கள் பல வர்ணங்களில் ஒளி வீசின. அந்த அறை முழுவதும் பிரகாசமாக விளங்கியது.

இந்த அதிசயத்தைப் பார்த்துக்கொண்டே சுந்தரம் உட்கார்ந்திருக்கும்போது அந்த

அரசன் நேராகப் படுக்கை அறையை அடைந்தான். கூட வந்த சிப்பாய்கள் அறைக்கு வெளியில் நின்றார்கள். உள்ளே நுழைந்த அரசன் என்ன செய்கிறான் என்று சுந்தரம் மெதுவாக எட்டிப் பார்த்தான்.

பொம்மையைப்போல் ராஜகுமாரி உட்கார்ந்திருந்தாள் அல்லவா? அந்தக் கட்டிலை அடைந்த அரசன் குனிந்து அந்தப் பெண்ணின் தலையில் அன்புடன் முத்தமிட்டான். பிறகு தலையைத் தடவிக்கொண்டே, "கண்ணே! எப்பொழுது உனக்கு விமோசனம் ஏற்படப் போகிறது? இன்னும் எத்தனை நாளைக்கு இந்தக் கஷ்டத்தை நான் பார்க்க வேண்டுமோ, தெரியவில்லையே?" என்று வருந்தினான்.

அவனுடைய கண்களிலிருந்து நீர் பெருகியது. அப்படியே அந்தச் சிலையைப் பார்த்துக்கொண்டு வெகுநேரம் உட்கார்ந்திருந்தான். கடைசியில் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு எழுந்தான்.

உடனே காவற்காரர்கள் முன்னால் வந்து வரிசையாக நின்றார்கள். சுந்தரம் அவசரம் அவசரமாகத் தூணுக்குப் பின்புறம் பதுங்கிக்கொண்டான். அந்த அவசரத்தில் அவனுடைய சட்டை செடியில் மாட்டிக்கொண்டு விட்டது. சட்டென்று திரும்பிய ஒரு காவற்காரன் அவனைப் பார்த்துவிட்டான். அவ்வளவுதான்! சுந்தரத்துக்கு உயிரே போய்விட்டது. அவன் பயந்துகொண்டு ஓடத் தொடங்கினான்.

உடனே, "விடாதே! பிடி!" என்று அத்தனை காவற்காரர்களும் அவனைத் துரத்திப் பிடித்து இழுத்து வந்து ராஜாவுக்கு முன்னால் நிறுத்தினார்கள். சுந்தரம் மிரள மிரள விழித்தான்.

அப்போது ஒரு காவற்காரன், "இவன்தான் நேற்றுப் பிடிபட்டவன்!" என்றான்.

அரசன், "இரும்புச் சிறையிலிருந்து இவன் எப்படித் தப்பினான்?" என்று கேட்டான்.

"சுரங்க வழியாகத்தான் தப்பியிருக்கிறான்" என்றான் ஒருவன்.

"சரி! இவனைச் சபைக்கு இழுத்து வாருங்கள்!" என்று சொல்லிவிட்டு அரசன் வெளியே சென்றான். கூட வந்த மச்சப் பெண் குடையைத் தூக்கிக்கொண்டு ஓடினாள். இன்னொரு காவற்காரன் சங்கை எடுத்து ஊதினான். ஒரு காவற்காரன் மட்டும் சுந்தரத்தைப் பிடித்து இழுத்துக்கொண்டு போனான்.

அன்று இரவு விடியும் வரையில் சுந்தரம் ஓர் அறைக்குள்ளேயே கிடந்தான். அவனுக்குப் பக்கத்திலேயே காவற்காரனும் உட்கார்ந்திருந்தான்.

பொழுது விடிந்ததும் மணிச் சத்தம் கேட்டது. சுந்தரம் தனக்கு என்ன தண்டனை கிடைக்குமோ என்று பயந்துகொண்டே எழுந்தான். இருந்தாலும் எப்படியாவது அந்த விசித்திர உலகத்தை விட்டுப்

போய்விட வேண்டும் என்ற எண்ணத்தினால் மனத்தில் ஒரு தைரியமும் பிறந்தது.

ஆகவே நாலைந்து காவற்காரர்கள் வந்து அவனை, "வா, சபைக்கு" என்று இழுத்துக் கொண்டு போகும்போது தலை நிமிர்ந்து அவர்களோடு சுந்தரம் போனான்.

முதல் நாள் இரவு சுந்தரம் கண்ட குள்ளமான அரசன் சபையில் உட்கார்ந்திருந்தான். அவன் உட்கார்ந்திருந்த சிம்மாசனம் தங்கத்தினால் செய்த தாமரைப் பூவைப் போல் இருந்தது. அவனுக்குப் பின்னால் பல பெண்கள் -எல்லாரும் மச்சப் பெண்கள்தான் - குடை பிடித்துக்கொண்டும் வெண்சாமரம் வீசிக்கொண்டும் நின்றார்கள்.

சிம்மாசனத்துக்கு முன்னால் பல மந்திரிகள் வெண்மையான தந்த ஆசனங்களில் உட்கார்ந்திருந்தார்கள்.

சுந்தரத்தைக் கொண்டு வந்து நிறுத்தியதும் அரசன் அவனை ஏற இறங்கப் பார்த்தான். பிறகு, "யாரங்கே?" என்றதும் ஒரு வேலைக்காரன் வந்து வணங்கினான். அவனை நோக்கி, "இவனுடைய உயரத்தை அள" என்றான்.

வேலைக்காரன் ஒரு கோலைக் கொண்டுவந்து சுந்தரத்துக்குப் பக்கத்தில் பிடித்து ஒரு பலகை மேல் ஏறி நின்று அளந்து பார்த்து, "நாலடி இரண்டங்குலம், மகாராஜா" என்றான்.

அரசன் சுந்தரத்தைப் பார்த்து, "பையா, நீ யார்?" என்று கேட்டான்.

சுந்தரம் விழித்தான். பிறகு யோசித்துப் பின்வருமாறு பதில் சொன்னான்: "என் பெயர் ஆர். சுந்தரம். எங்கப்பா பெயர், வி. ராமாமிருதம். அவருக்கு ஏ. ஜி. ஆபீசில் கிளார்க் உத்தியோகம். எங்கள் வீட்டு விலாசம்: நம்பர் பதினேழு, டி. பி. கோயில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை. போதுமா?"

அதைக் கேட்டதும் அந்தப் பவழ ராஜா, மடமடவென்று சிரித்தான். மந்திரிகளும் சிரித்தார்கள்.

"எதற்காகச் சிரிக்கிறீர்கள்?" என்றான் சுந்தரம். தன்னைப் பரிகாசம் செய்கிறார்கள் என்று அவன் நினைத்தான்.

"நாங்கள் சிரித்தது இருக்கட்டும். உன்மேல் கீழ்க்கண்ட குற்றங்கள் சாட்டப்பட்டிருக்கின்றன. பவழவல்லியின் நந்தவனத்தில் உத்தரவில்லாமல் பிரவேசித்தது; இரும்புச் சிறைக்குள்ளிருந்து தப்பி ஓடியது; பவழவல்லியின் படுக்கையறைக்குள் திருட்டுத்தனமாய்ப் பிரவேசித்தது - இந்த மூன்று குற்றங்களுக்கும் நீ என்ன பதில் சொல்லுகிறாய்?"

இவ்விதம் அரசன் கேட்டதும் சுந்தரம் அவனை ஏற இறங்கப் பார்த்தான். பிறகு கேட்டான்: "உங்கள் கேள்விக்குப் பதில் சொல்லுவதற்கு முன்னால் நான் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்லும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்."

"சரி, கேள்" என்றான் அரசன்.

"இந்தப் பவழலோகம் என்பது சென்னை நகரத்திலிருந்து எவ்வளவு தூரத்தில் இருக்கிறது? சென்னைக் கடற்கரையில் இருந்த நான் இங்கே எப்படி வந்தேன்? இங்கிருந்து சென்னைக்குப் போகவேண்டுமானல் என்ன செய்யவேண்டும்?" என்று ஒன்றன்பின் ஒன்ருகக் கேட்டான்.

அதைக் கேட்ட பவழராஜன் சற்றுக் கடுமையாக, "உனக்குப் பதில் சொல்ல நான் தயாராயில்லை. இங்கிருந்து நீ தப்பிப் போகவேண்டுமானல் ஒரே ஒரு வழிதான் உண்டு. நான் சொல்லும் வேலையை நீ செய்தால் தப்பிப் போகலாம்" என்ருன்.

"அது என்ன வேலையோ?"

"சொல்கிறேன், கேள். இங்கிருந்து மூன்று காத தூரத்தில் ஓர் அல்லிக் குளம் இருக்கிறது. அந்த அல்லிக் குளத்தின் அடியில் ஒரு தந்தப் பெட்டி கிடக்கிறது. அந்தப் பெட்டிக்குள் ஒரு தங்கப் பதக்கம் இருக்கிறது. அதை எடுத்துக்கொண்டு வரவேண்டும். அவ்வளவுதான்."

அதைக் கேட்ட சுந்தரம் யோசித்தான். அவன் எங்கே போய் அல்லிக் குளத்தைத் தேடுவது? எப்படிப் போய்த் தந்தப் பெட்டியை எடுப்பது? இதெல்லாம் அவனுக்கு நடக்கிற காரியமாய்த் தோன்றவில்லை.

அதற்குள் அரசன், "நீ முடியாது என்று சொன்னல் உனக்குத் தண்டனை என்ன தெரியுமா? முதலைக் கிடங்குக்குள் உன்னைப் போடச் சொல்வேன்" என்ருன்.

"நீங்கள் என்ன செய்தாலும் என்னல் இது முடியாத காரியம்" என்று சுந்தரம் சொல்ல நினைத்தான். ஆனல் அப்போது அவன் காலில் ஏதோ பிருண்டுவதுபோல் இருந்தது. குனிந்து பார்த்தான். காலடியில் ஆமை நின்றது; பழைய தங்க ஆமை.

அது அவனைப் பார்த்து, குசுகுசுவென்று சொல்லிற்று: "சரியென்று சொல்லு. மறுக்காதே! பின்னல் உனக்கு விவரம் சொல்லுகிறேன்."

சுந்தரம் சட்டென்று அரசனைப் பார்த்து, "நீங்கள் சொல்வதை நான் செய்ய ஒப்புக்கொள்ளுகிறேன்" என்ருன்.

அரசனுக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. "சபாஷ்! நீ புத்திசாலி என்று எனக்கு அப்பொழுதே தெரியும்!" என்று மறுபக்கம் திரும்பி வேலைக்காரனிடம், "இவனை இன்று சாயங்காலமே அல்லிக் குளத்துக்கு அழைத்துப் போக ஏற்பாடு செய்! நம்முடைய முதலைத் தேரைத் தயார் செய்து அதில் அழைத்துப் போங்கள். இவனுக்கு வேண்டிய சகல சௌகரியங்களும் செய்து கொடுங்கள். இனி இவன் நம் விருந்தாளி" என்ருன்.

அரசன் இவ்விதம் சொன்னதுதான் தாமதம்; எங்கிருந்தோ நாலைந்து மச்சப் பெண்கள் ஓடிவந்து அவனைக் கையைப் பிடித்து அழைத்துப் போனர்கள்.

(தொடரும்)



# பால திலகர்

**எம். எஸ். சுப்பிரமணிய ஐயர்**

நாம் வசிப்பது பாரத தேசம். இதில் முப்பத்து முக்கோடி ஜனங்கள். அவர்கள் அனைவருக்கும் அதிபர் பாபு ராஜேந்திர பிரசாத். அவரை நாமே தேர்ந்து எடுத்தோம். ஆதலின், அவரை 'ஜனாதிபதி' என்கிறோம்.

பாரத தேசத்தின் பிரதம மந்திரி **பண்டித ஜவாஹர்லால் நேரு.** இவரையும் ஜனங்களே தேர்ந்து எடுத்தார்கள். எனவே, நமது தேச ஆட்சி **'குடியரசு'** எனப்படும். நமக்கு இந்த அரசைத் தேடி வைத்தவர் மகாத்மா காந்தி.

காந்தி மகானை நாம் **'தேச பிதா'** என்கிறோம். குடியரசுக்கு அடிப்படை போட்டவர் **திலகர்.** மகாத்மாவுக்கு முன்பு, திலகரே நம் தேசத்தின் தலைவர். அப்போது எல்லாரும் திலகரை வாழ்த்தினார்கள்; வணங்கினார்கள்; **'லோகமான்யர்'** என்றும் பட்டம் சூட்டினார்கள்.

கண்ணுக்கு இட்டால், முகத்துக்கு அழகு. நெற்றிக்கு இட்டால், பார்வைக்கு அழகு! நெற்றியில் இடுவது திலகம், சாந்து, சந்தனம், குங்குமம். கஸ்தூரி இவற்றால் திலகம் இடுவது வழக்கம். திலகம் அழகு தரும் அல்லவா? அவ்விதமே நம் தேசத்துக்கு அழகு தந்தவர் திலகர். ஜனங்களுக்கு எல்லாம் திலகம் போன்றவர் அவர். அவரது முழுப் பெயர் பால கங்காதர திலகர்.

பாரத தேசத்திலே பல **ராஜ்யங்கள் உண்டு.** அவற்

றில் ஒன்று சென்னை ராஜ்யம். இந்த ராஜ்யத்தில்தான் நாம் இருக்கிறோம். திலகர் இருந்தது பம்பாய் ராஜ்யம். பம்பாய் ராஜ்யத்திலே ஒரு பாகம் மகாராஷ்டிரம்.

அந்த ராஜ்யத்திலே ரத்தினகிரி என்று ஒரு நகரம். பால கங்காதர திலகர் அந்த நகரில் பிறந்தவர். பிறந்த வருஷம் 1856.

திலகரின் தந்தை பெயர் ராமசந்திர திலகர். தாயின் பெயர் தபீபாய். ராமசந்திரர் ஸம்ஸ்கிருத பண்டிதர்; மராட்டி பாஷையிலும் மிக வல்லவர். பாடசாலையிலே ஆசிரியராக இருந்தவர். மகா தீர புருஷர். தாயோ மிக்க குணவதி; தயாள குணம் நிரம்பியவள்.

பிள்ளையும் மகா பண்டிதனாகவேண்டும் என்று ராமசந்திரர் ஆசைப்பட்டார். குமாரன் குணவானாக விளங்க வேண்டும் என்று தாய் ஆசை கொண்டாள். அப்படியே விளங்கினார் பால கங்காதர திலகர்.

குழந்தையை மடியில் வைத்துக்கொண்டு, ராமசந்திரர் கொஞ்சுவார், குலாவுவார். அப்போது, ஸம்ஸ்கிருத சுலோகங்களை ராகத்துடன் சொல்லி வருவார். குழந்தை கவனமாகக் கேட்கும். தந்தை சுலோகத்தின் பொருளையும் சொல்வார். குழந்தை சுலோகத்தையும் அதன் பொருளையும் மனத்திலே வாங்கிக்கொள்ளும்.

பால் கொடுக்கும் பொழுதும், பாராட்டும் பொழுதும் தாயும் கதை கூறுவாள். எல்லாம் ராமாயண, பாரதக் கதைகளாக இருக்கும். கதை என்றால், குழந்தைகளுக்கு மிகவும் பிரியம் அல்லவா? அந்தக் குழந்தை கருத்துடன் கேட்டுவரும்; கனிவு கொள்ளும்; ஊக்கமும் உற்சாகமும் அடையும்; துள்ளி எழும்.

சுலோகத்தையும் சரி, கதைகளையும் சரி, தாய் தந்தையரிடம் அப்படியே குழந்தை ஒப்பிக்கும்; உடனே குதூகலமும் கொள்ளும். தாயும் தந்தையும் அது கண்டு ஆச்சரியம் அடைவார்கள்; குழந்தையை வாரி எடுத்து மார்போடு அணைத்து, உச்சி மோந்து ஆனந்தம் அடைவார்கள்.

பால திலகருக்கு ஆறுவது வயசில் வித்தியாரம்பம் செய்து வைத்தார்கள். ஆனாலும், பதினொரு வயது வரையில் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பவில்லை. தாயும் தந்தையும் கதையும் சுலோகமுமாகவே பாடம் சொல்லிக் கொடுத்து வந்தார்கள். எதையும் ஒருதரம் கேட்டால் போதும்; பால திலகரின் மனத்தில் அது பதிந்துவிடும். அவ்வளவு புத்திக் கூர்மை! அவ்வளவு ஞாபக சக்தி!

பிழையே இல்லாமல், ஒப் பிக்கும் சுலோகத்துக்கும் சொல்லும் கதைக்கும் ஓரொரு காசு பரிசு தருவார் தந்தை. பத்து வயசுக்குள் பால திலகர் பெற்ற பரிசுத் தொகை நாலைந்து ரூபாய் ஆகும். மழலை மொழியில் குழந்தை ஒப்பிக்கும் சுலோகத் தையும் கதையையும் கேட்டு ஊராரும் சந்தோஷம் அடைவார்கள்.

பதினோராம் வயசிலே பால திலகர் பள்ளிக்கூடம் போக ஆரம்பித்தார். ஆசிரியர் கற்பிக்கும் பாடத்தை மிகவும் கவனத்துடன் கேட்பார். அங் கும் இங்கும் பார்க்கமாட்டார். எல்லாவற்றையும் மூளையி லேயே குறித்துக்கொள்வார். கணக்கையும் பலகையிலோ தாளிலோ எழுதிக்கொள்ள மாட்டார். மனக்கணக்காகவே முடித்து விடை சொல்லி விடுவார்.

“கணக்கை எங்கே எழுதிக் கொண்டாய்? அதை எப் படிப் போட்டாய்? போட்ட வழி என்ன? பலகையைக் காட்டு, பார்ப்போம்” என்று ஆசிரியர் கேட்பார். திலகர் எதைக் காட்டுவார்? மனத்தை யும் தலையையுமே கையினால் தொட்டுக் காட்டுவார். ஆசிரியரும் பையன்களும் அதைப் பார்த்து ஆச்சரியம் அடைவார்கள். கணக்கை எழுதிக்கொள்ளா விட்டாலும் என்ன? விடை சரியாகவே இருக்கும்.

வயசு பதினாறு ஆகும் முன்பே காலேஜில் அவர் சேர்ந்துவிட்டார். அங்கே பேராசிரியர்கள் பிரசங்கம் செய்து போதிப்பது வழக்கம். அதை மாணவர்கள் உடனுக் குடன் நோட்டுப் புத்தகத்தில் எழுதிக்கொள்ள வேண்டும். திலகரோ அப்படிச் செய்வ தில்லை. நெஞ்சம் என்னும் ஏட்டிலேயே எழுதிவருவார்.

எல்லாரும் எழுதிவர, நம் திலகர் மட்டும் எழுதாமல் சும்மா இருப்பதை ஒரு நாள் பேராசிரியர் கவனித்தார். உடனே, “நோட்டுப் புத்தகத் தில் ஏன் எழுதிக்கொள்ள வில்லை? சும்மா இருக்கிறாயே” என்று கோபத்தோடு கேட் டார். “காகிதம் கிழிந்து விடும்; நெஞ்சம் என்ற ஏடு ஒருநாளும் கிழியாது” என்று திலகர் மிக்க அடக்கத்துடன் பதில் சொன்னார்.

அதைக் கேட்டதும், பேராசிரியர் பெரிதும் பிரமித் தார். கோபமோ அடங்க வில்லை. “அப்படியா? இப் போது நான் சொல்லி வந்த தைச் சொல்லு, பார்க்கலாம்” என்று அதட்டினார். உடனே அந்தப் பிரசங்கத்தை ஒரு வார்த்தைகூட விடாமல் அப் படியே ஒப்பித்தார் திலகர். அவ்வளவுதான்; “மேதை நீ! மேதை நீ!” என்று கூறி, மூக் கில் விரல் வைத்தார்,

பேராசிரியர். மற்ற மாணவர்களும் அடங்காத ஆச்சரியம் அடைந்தார்கள்.

பதினைந்தாவது வயசில் திலகருக்கு விவாகம் ஆயிற்று. ஒரு சமயம் அவர் மாமனுர் வீடு போயிருந்தார். திண்ணையிலே உட்கார்ந்திருந்தபோது, "அம்மா தாயே! பிடி அரிசி போடு. புண்ணியம் உண்டு" என்று பிச்சைக்காரன் வந்து கூவினுன்.

நகைநட்டுக்களை நீராடும் போது கழற்றி அரிசிப் பானையில் வைப்பது பெண்களின் வழக்கம். திலகரின் மனைவி கை நிறைய அரிசி கொண்டு வந்து போட்டாள். கல் இழைத்த மூக்குத்தி பிச்சைப் பாத்திரத்தில் ஜொலித்தது. தெரியாமல் நகையையும் போட்டுவிட்டோமே என்று அவள் தனக்குள்ளே வருந்திஞள்; சற்றே தயங்கி நின்ருள்.

அதை ஊகத்தால் உணர்ந்தார் திலகர். உடனே, "பெண்ணே, கவலைப் படாதே. பிச்சைக்காரன் கொடுத்து வைத்தான் மூக்குத்திக்கு. எல்லாம் ஆண்டவன் செயல்! ஆகவே, ஆனந்தம் கொள். ஆயாசம் அடையாதே" என்ருர் அவர். கணவரது பெருந்தன்மையைக் கண்டு அவள் களித்தாள்; புத்தியும் கொண்டாள்.

பண்டிகை நாட்களில் மாப்பிள்ளைகள் வேட்டகம் போவார்கள். அந்தச் சமயத்தில் தங்கக் கைக்கடிகாரம் வேண்டும்; வைரம் வைத்து இழைத்த மோதிரம் வேண்டும்; பனரஸ் பட்டுப் பட்டாடை வேண்டும்; மோட்டார் வாகனம் வேண்டும் என்று மாப்பிள்ளைகள் பலவாறு கேட்பார்கள்.

பால கங்காதர திலகர் என்ன கேட்டார் தெரியுமா? "மாமா, நான் படிப்பில் மேன்மை பெற வேண்டும்; பெரிய பண்டிதன் ஆகவேண்டும்; பெருமையெல்லாம் பெற வேண்டும்; பெரும் புத்தி கொள்ள வேண்டும் என்று ஆசீர்வாதம் செய்யுங்கள்!" என்றே கேட்டார். மாமனுர் அன்புடன், "உனக்கு ஏதாவது வாங்கித் தரவேண்டும் என்பது என் ஆசை. என்ன வேண்டும்? கேள்" என்று கட்டாயம் செய்தார். "அப்படியாஞல் நல்ல நல்ல புத்தகங்கள் வாங்கிக் கொடுங்கள்! அரிய பெரிய இலக்கிய நூல்களை வாங்கித் தாருங்கள்!" என்றே சொன்ஞர் திலகர்.

திலகரின் தந்தையிடம் பெரிய புத்தகாலயம் ஒன்று உண்டு. ஸம்ஸ்கிருத, மராட்டி பாஷைகளில் மிக உயர்ந்த புத்தகங்கள் இருந்தன. அவற்றை ஒன்று ஒன்ருக அவர் எடுப்பார். கண்ணில் ஒத்திக்கொள்வார்; ஓர் எழுத்து விடாமல் வாசிப்பார்.

இப்படி அவர் படித்து வந்து மகா பண்டிதராக ஆனுர்.

வாலிப வயசில் திலகர் சோனியாகவே இருந்தார். இது அவருக்குப் பிடிக்க வில்லை. உடல் பயிற்சியில் ஊக்கம் கொண்டார்; ஆறு, குளம் இவற்றில் இறங்கி நீந்திஞர்; படகு ஓட்டிஞர்; குஸ்தி போட்டுப் பழகிஞர். இதனுலெல்லாம் உடம்பில் நல்ல வலிமை உண்டாயிற்று. பிறகு தான் ஆறுதல் அடைந்தார். ஒரு சமயம் அவர் காசியிலே கங்கையில் நீந்தி, அக்கரை சேர்ந்தார்.

கூடப் படிக்கும் மாணவர்களில் யாராவது நோஞ்சலாக இருந்தால், அவர் சகிக்க மாட்டார். அந்த மாணவரை வெளியிலே இழுத்து வருவார்; "உடல்பயிற்சி செய்" என்பார். "விளையாட்டு மைதானத்துக்குப் போ; ஓடியாடு; ஓய்ந்திராதே. ஓடுகிற பாம்பை மிதிக்க வேண்டிய பருவத்திலே மருந்துப் புட்டி எதற்கு?" என்று புத்தி சொல்வார்.

வடமொழி, மராட்டி, ஆங்கிலம் ஆகிய பாஷைகள் அவர் சொன்னபடி கேட்கும். அவருக்கு உலக சரித்திரம் கரதலபாடம். கணித சாஸ்திரம் அவரிடம் கைகட்டி நிற்கும். சட்ட சாஸ்திரம் அவர் இட்ட பிச்சை.

'வேதங்களின் ஆதிகாலம், கீதா ரகசியம், கிழக்கு நாடுகளின் கீர்த்தி' என்று பல அற்புத நூல்களை அவர் எழுதியிருக்கிருர். மேல்நாட்டு மேதாவிகள் அவற்றை வாசித்துவிட்டு, "திலகர் மகா பண்டிதர், பெரிய மேதை, ஆழ்ந்த படிப்பாளி, அரிய அறிவாளி" என்று புகழ்ந்து பேசியிருக்கிருர்கள்.

படிப்பு முடிந்ததும், உத்தியோகம் பண்ணிப் பணம் தேட அவர் விரும்பவில்லை. ஊருக்கு உழைக்கவே முற்பட்டார்; எல்லாருக்கும் தொண்டு புரியவே முனைந்தார். ஏழைகளுக்கு இரங்கிஞர். அனைவருக்கும் இனியராக விளங்கிஞர். பத்திரிகையின் மூலம் பாமரர்களுக்கு ஞானம் ஊட்டிஞர்.

1920-ஆம் வருஷம் ஜுலை மாதம் 31-ஆம் தேதி இரவில் அவர் இந்த மண்ணுலகை விட்டு விண்ணுலகம் போஞர். அவர் பெயரை முன்னிட்டே, "**திலகர் சுயராஜ்ய நிதி**" என்று மகாத்மா காந்தி ஒரு நிதி திரட்டிஞர். சுயராஜ்யப் போர் நடத்திஞர்.

"சுயராஜ்யம் என் பிறப்புரிமை! அதை அடைந்தே தீருவேன்! யாரும் தடுக்க முடியாது" என்று முதல் முதல் முழக்கியவர் திலகரே.

"வாழ்க திலகர் நாமம்
வாழ்க, வாழ்கவே!"

என்று நமது தேசீய கவி பாரதி பாடியிருக்கிருர்.

# எழுத்திலே படங்கள்



1. எலி. 2. நரி. 3. முயல். 4. ஆடு. 5. பூனை. 6. மயில்.

## வேடிக்கைக் கணக்குகள்

நான் ஒரு கணக்குப் போட்டுக் காண்பிக்கிறேன். முதல் முதலில் நீங்கள் சொல்லும் தொகை 2543 என்று வைத்துக்கொள்வோம். இதற்கு விடை இதோ இருக்கிறது. 22,541.

இப்பொழுது நீங்கள் (a), (c) என்று போட்டிருப்பதற்கு நேராக ஏதாவது தொகைகளை எழுதுங்கள். (a) 7364; (c) 4298 என்று இருக்கட்டும். பாக்கி இரண்டையும் நான் பூர்த்தி செய்கிறேன். (b) 2635; (d) 5701. இப்பொழுது விடை சரியா என்று கூட்டிப் பாருங்கள்.

| | |
|---|---|
| | 2543 |
| (a) | 7364 |
| (b) | 2635 |
| (c) | 4298 |
| (d) | 5701 |
| விடை | 22541 |

முதலில் நீங்கள் சொன்ன தொகை 2543 தானே? அதில் 2ஐக் கழித்து 2541ஐ விடையில் போடுங்கள். பிறகு 2 என்னும் எண்ணை அதற்கு இடது கோடியில் எழுதுங்கள். அதாவது 22541. இதுதான் கணக்கிற்கு விடை.

அடுத்தபடியாக நான்கு வரிசைகளைப் பூர்த்தி செய்யவேண்டும். (a) என்பதற்கு நேராக 7364 என்பதையும் (c) என்பதற்கு நேராக 4298 ஐயும் போட்டிருக்கிற தல்லவா? இப்பொழுது நீங்கள் 7364–இல் உள்ள ஒவ்வோர் எண்ணையும் முறையே 9–இல் கழித்து மிகுதியை (b)-க்கு நேராகப் போட வேண்டும். அதாவது 2635. ஒன்று ஸ்தானத்தில் 9-4=5உம், பத்து ஸ்தானத்தில் 9—6=3உம், இப்படியே நூறு ஸ்தானத்தில் 6 உம் ஆயிர ஸ்தானத்தில் 2உம் போட வேண்டும். இவ்விதமாக (d)-க்கு நேராக 5701ஐப் போட வேண்டும்.

வேண்டுமானல் (b)-க்கு நேரே போடுவதை (d)யிலும் (d)-க்கு நேரே எழுத வேண்டியதை (b) யிலும் எழுதலாம்.

முதல் வரிசையில் எழுதும் தொகை நான்கு ஸ்தான எண்ணுக இருந்தால் கணக்கில் ஐந்து ஸ்தான எண்களைக் கூட்டக் கூடாது. நான்கு ஸ்தான எண்களையோ அல்லது குறைந்தவைகளையோதான் உபயோகிக்க வேண்டும். நான்கு ஸ்தான எண்களுக்குக் குறைவான வைகளை உபயோகித்தால் பின்வருமாறு போடவேண்டும்:—

| | |
|---|---|
| 2543 | (a) இல் ஆயிர ஸ்தானத்தில் ஒரு லக்கமும் கிடை |
| (a) 362 | யாது. அதனுல் (b) க்கு நேராக ஆயிர ஸ்தானத்தில் |
| (b) 9637 | 9ஐ எழுத வேண்டும். |
| (c) 204 | — கி. வரதராசன், பாலர் மன்றம், |
| (d) 9795 | 28, சரோஜினி தெரு, சென்னை-17 |
| 22,541 | |

ஃ ஃ ஃ

அன்புடையீர்,

இத்துடன் இருக்கும் என் பையனின் கட்டுரையில் கீழ்க்கண்ட எட்டுப் பதங்களும் இயற்கையாகவே அவனுக்கு வந்திருக்கின்றன. "வணக்கம், இதழ்; மாணவர்; வெளி வருவது; இலக்கணப் பிசகு; மெய்யாகவே; சினிமாக்காரர், மிகவும்.''

K. N. சுந்தரேசன் (தந்தை: K. 20)

ஃ ஃ ஃ

கண்ணன் ஆசிரியர் அவர்களுக்குப் பண்புமிக்க மாணவன் அநேக வணக்கம். இந்தப் பாட்டைக் 'கண்ணனி'ல் பிரசுரிக்க வேண்டிக்கொள்கிறேன்.

"என்றும் இளமை இனிமை எழின்மிக்க
நன்று நனிபயக்கு நற்றமிழ்போல் - என்றென்றும்
ஒள்ளிய கண்ணன் எனும்பாலர் பத்திரிகை
உள்ளொளி வீசும் உயர்ந்து.''

—சி. பிரமநாயகம், வயது 13. (P. 19) திருநெல்வேலி.

ஃ ஃ ஃ

## சாப்பிட்டுப் பாருங்கள்!

### தக்காளி வைடமின் ஸாலட்

"சகோதரி புதுச்சேரி சுமதி தக்காளிப் பழ அல்வா செய்து சாப்பிடச் சொன்னுள். ரொம்ப ருசியான பட்சணந்தான். ஆனுல் சர்க்கரை கிடைக்காத நாளாச்சே! ஆகையால் இந்த மாதிரி செய்து தினம் சாப்பிடலாமே! தேவை: பழுத்த தக்காளிப் பழம் நாலு; பச்சைக் கொத்துமல்லி ஒரு கட்டு; பிஞ்சு பச்சை மிளகாய் ஆறு; பாதி எலுமிச்சம்பழம். பொடி உப்பு $1\frac{1}{2}$ தேக்கரண்டி.

பச்சை மிளகாயைப் பொடிப் பொடியாக நறுக்கி ஒரு ஸ்டீல் அல்லது ஈயம்பூசிய கிண்ணத்தில் போட்டு, $1\frac{1}{2}$ தேக்கரண்டி உப்பையும் போடவேண்டும். 10 நிமிஷம் ஊறியதும் எலுமிச்சம்பழத்தைப் பிழியவேண்டும். மறுபடியும் 5 நிமிஷம் ஊறட்டும். கொத்துமல்லியையும் தக்காளிப் பழத்தையும் நன்ருக நல்ல ஜலத்தில் கழுவி, நறுக்கிப் போட வேண்டும். பிறகு சுண்டைக்காய் அளவு பெருங்காயம், அரைத் தேக்கரண்டி கடுகு, வெந்தயம் மூன்றையும் போட்டுப் பதமாய்த் தாளித்துக் கொட்டிக் கலக்கவேண்டும். அரை மணி ஊறியதும் சாதத்துடன் சாப்பிடலாம். வைடமின் சத்து நிரம்பி, வாய்க்கும் ரொம்ப ருசியாக இருக்கும் ஸாலட் இது.

R. சந்திரிகா பிரியதரிசினி, வயது 13, (C. 18) சென்னை 16.

கண்ணன் ஆசிரியருக்கு, வணக்கம்.

கோட்டயம் சென்னையிலிருந்து ரொம்பத் தூரம். எல்லாப் பள்ளிக்கூடத்துக்கும் போன பின்பு எங்கள் பள்ளிக்கூடத்துக்கு வந்து (போட்டோவுடன் வெளியாகும் பகுதிக்கு) எழுதச் சொல்வதற்குள் நாங்கள் எல்லாம் கிழவிகளாகப் போய்விடுவோமே!

வி. சரஸ்வதி, வி. மாலதி (S. 19) கோட்டயம்.

[அப்படி நேர்ந்தால், கட்டாயம் உங்கள் பேத்திகளையாவது எழுதச் செய்கிறோம்!—ஆ-ர்]

ஃ ஃ ஃ

## குழந்தை எழுத்தாளர் சங்கம்

அன்புடையீர், வணக்கம்.

13-4-1950 மாலை 5 மணிக்கு, குழந்தை எழுத்தாளர் சங்கம் என்ற பெயரில் குழந்தைகளுக்காக எழுதும் பலரும் சேர்ந்து ஒரு சங்கம் அமைத்துள்ளோம். இதில் சேர விரும்புபவர்கள் கீழ்க் கண்ட விலாசத்துக்கு எழுதவேண்டும்.

அழ. வள்ளியப்பா, காரியதரிசி,
குழந்தை எழுத்தாளர் சங்கம், 4, ரட்லண்ட் கேட் காலனி, சென்னை 6.

ஃ ஃ ஃ

'கண்ணன்' ஆசிரியர் அவர்களுக்கு மிக்க நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். "பள்ளிக்கூட விஷயங்களைக் கையால் நிறுத்திப் பிடித்து எழுதடா" என்றால் எழுதமாட்டான். இப்பொழுது கதை எழுதினதும் காணுதென்று சிரத்தை எடுத்து நன்றாக நிறுத்தியும் எழுதியிருக்கிறான். ஆகையால் இதன் மூலம் சிறுவர்களின் மூளைக்கு நல்ல வேலையும், கைக்கு நல்ல பயிற்சியும் உண்டாகும் என்று நம்புகிறேன்.

வே. நாராயணசாமி, ஸ்ரீவைகுண்டம்.

ஃ ஃ ஃ

## தங்க மோதிரம்

ஒரு ஊரில் ஒரு பணக்காரன் இருந்தான். அவனுக்கு இரண்டு குழந்தைகள் இருந்தன. அவன் பெயர் மோகன்; அவள் பெயர் சந்திரா. இருவரும் சுகமாய் வாழ்ந்து வந்தார்கள். இருவரும் ஒரு நாள் கடற்கரைக்கு விளையாடப் போனார்கள். அப்பொழுது மோகன் மண்ணில் இருந்து பளபளப்பான ஒரு தங்க மோதிரத்தை எடுத்தான். அதைத் தன் அக்காவிடம் கொடுக்க, அதைப் பார்த்த அக்கா ஓடிப்போய்த் தன் அப்பாவிடம் காண்பித்தாள். அப்பா அதைப் பார்த்து ஆச்சரியப்பட்டார். மோகன் அதை வாங்கித் தன் அக்காவுக்குக் கொடுத்துச் சந்தோஷமாய் விளையாடினான்.

தி. மீனாட்சிசுந்தரம், வயது 11, (M. 42) மதுரை.
(பேனாப் பரிசுப் போட்டிக்கு வந்த சின்னஞ் சிறு கதை.)

## பிழை திருத்தம்

சென்ற இதழில் 'விநோத நாள் குறிப்'பில் சிறு திருத்தம். பிப்ரவரிக்கு எதிரில் 6 என்று இருப்பது தவறு. 3 என்று இருக்க வேண்டும். 15×4 என்று இருப்பதும் அச்சுப் பிழை. 15+4 என்று திருத்திக்கொள்ள வேண்டும். (ஆ-ர்)

# குரங்கு

எழுதியவர்: தி. ஜ. ர.




நம் தாத்தாவுக்குத் தாத்தாவுக்குத் தாத்தாவுக்குத் தாத்தா இப்படியே நாலு கோடி தாத்தா தாண்டி ஒரு தாத்தா இருந்தாராம். அவர் யார் தெரியுமா? அவர் ஒரு குரங்காம்! இப்படிச் சொல்லுகிறார்கள் ஸயின்ஸ் பண்டிதர்கள். இது நிஜமோ, பொய்யோ? எப்படியானாலும் சரி; நாம் ஹநுமானை வணங்குகிறோம். அவர் மகாபுத்திமான்.

குரங்குகளுக்கே பொதுவாக நல்ல அறிவு உண்டு. குரங்குகளிலே எத்தனையோ வகை:

வால்குரங்கு, வாலில்லாக் குரங்கு, குட்டை வால் குரங்கு, கருங்குரங்கு, கொண்டை முசு, உராங் ஊடாங், பாபூன் இந்த மாதிரி எத்தனையோ வகை.

ஒரு காட்டிலே ஏராளமான குரங்குகள் இருந்தன. சாதாரண வால்குரங்குகள். அந்தக் காட்டுக்குப் பக்கத்திலே ஓர் ஆறு இருந்தது. ஆற்றிலே ஜலம் இருந்தது. ஜலம் இருக்கவாவது! ஓடியது; வெகு வேகமாக, வெகு ஆழமாக ஓடியது.

ஒரு நாள் குரங்குகளெல்லாம் சத்தம் போட்டன; மரத்துக்கு மரம் தாவின; சத்தம் போட்டன.

"கரபுர - கரபுர - டுர்ர்ர்! எல்லாரும் வாருங்கள்! எல்லாரும் வாருங்கள்! பாலம் கட்டுவோம். அக்கரைக்குப் போவோம். கிராமத்திலே நுழைவோம்"—இது தான் அந்தச் சத்தத்துக்கு அர்த்தம்.

"கரபுர - கிக்கர் - பிக்கர்! இதோ வந்தோம்; இதோ வந்தோம்—" இப்படிச் சத்தம் போட்டன பல குரங்குகள். நல்ல பலம் உள்ள பெரிய குரங்குகள் ஒரு மரத்தில் கூடின. ஆற்றங்கரையிலே இருந்தது அந்த மரம். அதன் உச்சாணிக் கிளை ஒன்று ஆற்றின் மேல் நீண்டிருந்தது. ஒரு பெரிய குரங்கு அந்தக் கிளை நடுவுக்குப் போயிற்று. கிளையில் தன் வாலைச் சுற்றியது. தலை கீழாகத் தொங்கியது. அடுத்தாற்போல் இன்னொரு குரங்கு போயிற்று. தொங்கிய குரங்கிடம் இரண்டாவது குரங்கு தன் வாலை நீட்டியது. அது கெட்டியாகப் பிடித்துக்கொண்டது. முதல் குரங்கின் கையில் இரண்டாவது குரங்கு தலை கீழாகத் தொங்கியது. மூன்றாவது குரங்கு வந்தது. இரண்டாவது குரங்கிடம் தன் வாலைக் கொடுத்தது. அதன் கையில் தலை கீழாகத் தொங்கியது. இப்படியே நாலாவது, ஐந்தாவது என்று இருபது முப்பது குரங்குகளுக்கு மேல் வந்தன. ஒன்றுக்குக் கீழ் ஒன்றாகத் தொங்கின. அது ஒரு பெரிய சங்கிலி போல் ஆயிற்று. அந்தக் குரங்குச் சங்கிலி, ஓர் ஊஞ்சல் கயிறு போல் ஆடியது. வரவரப் பலமாய் ஆடியது. சங்கிலி முனை



போல் இருந்தது கடைசிக் குரங்கு. எதிர்க் கரையில் ஒரு மரம் இருந்தது. அதன் கிளை ஒன்றும் ஆற்றின் மேலே நீண்டிருந்தது. கடைசிக் குரங்கு ஆடி ஆடிக் கடைசியில் அந்தக் கிளையைப் போய்ப் பிடித்துக்கொண்டது. இக்கரை மரக்கிளைக்கும் அக்கரை மரக்கிளைக்குமாக ஒரு குரங்குப் பாலம் அமைந்துவிட்டது.

இந்தக் குரங்குச் சங்கிலிப் பாலத்தின் மேலே, பிற குட்டிக் குரங்குகள், பெண் குரங்குகள் எல்லாம் நடந்தன. இக்கரையிலிருந்து அக்கரைக்குப் போயின.

பாலமாக இருந்த குரங்குகள் அக்கரைக்குப் போக வேண்டாமா? இக்கரை மரத்தில் வாலைச் சுற்றியிருந்ததே, முதல் குரங்கு; அது தன் வாலை விடுவித்துக் கொண்டது. குரங்குச் சங்கிலி இப்போது அக்கரையிலிருந்து ஆடியது. சற்று நேரம் ஆடி ஆடி நின்றது. சங்கிலிக் குரங்குகளெல்லாம் 'தொப்' 'தொப்' என்று குதித்தன.

"கிரெள - குரெள - கிக்கர் - குக்கர் - எல்லாரும் வந்துவிட்டோம். தோட்டம் துரவு, வீடு வாசல் எங்கும் புகுவோம். சூறையாடுவோம்" என்று கத்தின.

காய், கனி, தானியம், இலை எல்லாம் தின்னும் குரங்கு. வயிறு நிறையத் தின்னும். அதிகமாயிருந்தால் கன்னத்திலே அடக்கிக்கொள்ளும்: கன்னங்கள் பெரிய பைமாதிரி தொங்கும். மாமிசம் தின்னுது. ஊரிலே எங்கே பார்த்தாலும் குரங்குகள் திரிந்தன. அகப்பட்ட தீனியையெல்லாம் தின்றன. இல்லாத குறும்பெல்லாம் செய்தன. குறும்பு என்றால், குரங்குகளுக்கு ரொம்பவும் இஷ்டம். அது ஊராருக்கு வெகு கஷ்டமாகப் போய்விட்டது.

கொஞ்ச நாளைக்கெல்லாம் நல்ல வேளையாக, குரங்குகள் திரும்பின. முன்போலவே சங்கிலிப் பாலம் போட்டன. அக்கரைக் காட்டுக்குப் போய்விட்டன. ஆனால், ஒரே ஒரு குரங்குக் குடும்பம் மட்டும் ஏமாந்துவிட்டது. அப்பாக் குரங்கு ஒன்று, அம்மாக் குரங்கு ஒன்று, குட்டிக் குரங்கு ஒன்று – இவை மூன்றுந்தான் அந்தக் குடும்பம். இவை இந்த ஊரிலேயே தங்கிவிட்டன.

குட்டிக் குரங்கு மிகவும் சிறியது. அம்மாவிடம் பால் குடிக்கும் பருவம். அம்மாவின் மார்பைக் கெட்டியாகக் கட்டிக் கொள்ளும். அம்மா அதைப் பிடித்துக்கொள்ளாது. எங்கே இஷ்டமோ அங்கே போகும்; தாண்டிக் குதிக்கும். அம்மா என்ன செய்தாலும் குட்டி விழாது; பிடித்த பிடியை விடாது. 'குரங்குப் பிடி' என்று கேட்டதில்லையா? குட்டியின் பிடிகூட அவ்வளவு கெட்டி.

இந்த அப்பாக் குரங்கும் அம்மாக் குரங்கும் ஊரிலே செய்த அட்டகாசம் கணக்கு வழக்கில்லை. பெரியவர்களுக்கெல்லாம் எரிச்சல் வந்தது. குழந்தைகளுக்கெல்லாம் வேடிக்கையாய் இருந்தது.

தென்ன மரத்துத் தேங்காய், மாமரத்து மாங்காய், கொய்யா மரத்துக் கொய்யாக்காய் எல்லாம் ஹதம். குரங்குகள் நாசம் செய்தன.

"சிரங்கி! உர்ர்ர்" என்று குழந்தைகள் பாய்ச்சல் காட்டும்.

குரங்குகளும் "உர்ர்ர்" என்று பயங்கரமாய் உறுமும்.

தென்னமரத்திலே உட்கார்ந்திருக்கும் குரங்குகள். கல்லை விட்டெறிவார்கள் சிறுவர்கள்.




உடனே குரங்குகளுக்குக் கோபம் வந்துவிடும். தேங்காயைப் பிடுங்கி இவர்கள்மீது எறியும். "நல்லதாய்ப் போச்சு!" என்று சிறுவர்கள் சந்தோஷம் அடைவார்கள்; தேங்காயை எடுத்துக்கொண்டு ஓடுவார்கள்.

தோட்டக்காரனுக்கு வெகு ஆத்திரம். இந்தக் குரங்குகளைப் பிடித்துவிட வேண்டும் என்று எண்ணினான்.

"குரங்கு பிடிப்பது எப்படி?" என்று ஒரு சிநேகிதனைக் கேட்டான்.

"பெரிய குரங்கைப் பிடிக்காதே. பிடித்தால் அது மனிதரோடு பழகாது. அதை வைத்திருப்பது மகா கஷ்டம். குட்டிக் குரங்கைப் பிடி. அதைப் பழக்குவது சுலபம். ஒரு தேங்காயை எடு. அதில் சின்ன ஓட்டை போடு. குரங்கின் கை நுழையக் கூடிய ஓட்டை. தேங்காய்க்குள் ஒரு பணியாரத்தை வை. இரும்புச் சங்கிலியோ, உறுதியான கயிருே எடு. தேங்காயில் கோத்து, ஒரு முளையில் கட்டி விடு. குரங்கு வருகிற இடத்தில் இப்படிக் கட்ட வேண்டும். குரங்கு சிக்கிக் கொள்ளும்" என்றான் அந்தச் சிநேகிதன்.

அப்படியே செய்தான் தோட்டக்காரன்.

இப்போது குட்டிக் குரங்கு வளர்ந்துவிட்டது. இவன் ஆசைப்படி அதுவே வந்தது. தேங்காய்க்குள் கையை விட்டது. இவன் அதைப் பிடிக்க ஓடினான். குட்டிக் குரங்கின் கை, தேங்காயில் மாட்டிக்கொண்டிருந்தது. அது பணியாரத்தைப் பிடித்திருந்தது. குரங்குதான் பிடித்த பிடியை விடாதே. பணியாரம் பிடித்த கை வெளியே எப்படி வரும்? வரவில்லை. தேங்காய் மாட்டிய கையோடு குரங்கு ஓடப் பார்த்தது. தேங்காயையோ முளையில் கட்டியிருந்தது. குரங்கால் அதை அறுக்க முடியவில்லை.

"கியா - பியா - கியா - பியா - ஐயோ! இந்தத் தேங்காய் என்னை விடமாட்டேன் என்கிறதே" என்று குட்டிக் குரங்கு கத்தியது.

கத்தி என்ன பிரயோஜனம்? தோட்டக்காரனிடம் அகப்பட்டுக் கொண்டது.

பெரிய குரங்குகள், "உர்ர்ர் - உர்ர்ர்" என்று தோட்டக்காரனை மிரட்டிப் பார்த்தன. தடியை எடுத்துக்கொண்டு அவன் விரட்

டினுன். அவை பயந்தோடி விட்டன.

குட்டிக் குரங்கிடம் தோட்டக் காரனுக்குப் பரிதாபம் உண்டா யிற்று. அதை அன்போடு வளர்த்தான். அன்பு காட்டினுல் தான், குரங்கு கட்டுப்படும்; கண்டித்தால் கட்டுப்படாது. குட்டிக் குரங்கு நன்ருய்ப் பழகியது. சொல்லிக் கொடுத்த வேடிக்கையையெல்லாம் கற்றுக் கொண்டது.

ஆனுல் ஒன்று: குரங்குக்குச் சில பேரைக் கண்டாலே பிடிக் காது; சில பேரைப் பிடிக்கும். தோட்டக்காரனுக்குச் சாமு என்று ஒரு மகன்; பூமா என்று ஒரு பெண். சாமுவிடம் குட்டிக் குரங்குக்குப் பிரியம்; பூமா விடம் வெறுப்பு. அவளைக் கண்ட போதெல்லாம், 'உர் - உர்' என்று உறுமும். பூமாவின் நிலைக்கண்ணுடியை எடுத்து உடைக்க வேண்டும் என்று அதற்கு ஓர் ஆசை. இந்தக் குறும்பைச் செய்ய, அது சமயம் பார்த்திருந்தது. எந்தக் குரங் குக்குமே இது வழக்கம். இந்த மாதிரி ஆசை வந்தால், ஒரு வாரம், பத்து நாள்கூடப் பேசா மல் இருக்கும்; தந்திரமாய்க் காத்திருக்கும்.

குட்டிக் குரங்கைக் கட்டி யிருந்த கயிற்றின் முடிச்சு ஒரு நாள் அவிழ்ந்து விட்டது. குரங்கு மெல்லக் கிளம்பியது. தன் அழகான முகத்தை நிலைக் கண்ணுடியிலே பார்த்துக்கொண் டது. 'படீர்' என்று அதைக் கீழே போட்டு உடைத்தது.

பூமா திரும்பிப் பார்த்தாள். "ஐயோ! என் கண்ணுடி!" என்று கத்தினுள்.

"உர் - புர் – கிக் கிக் கிக்" என்று பல்லைக் காட்டியது குரங்கு. அதற்கு அவ்வளவு குஷி.

"அப்பா - அப்பா!" என்று கத்தினுள் பூமா.

குட்டிக் குரங்கு "உர்ர் - உன்னை ஏய்ச்சுப்புட்டேனே" என்று அழகு காட்டியது. 'குபீர்' என்று மரத்தின் மேலே தாவியது. ஓடியே போய்விட்டது. தன் அப்பா, அம்மாவோடு போய்ச் சேர்ந்துகொண்டது.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS, 4.



# ‘ஸீக்கர்’ விளையாட்டு

விளையாட்டு என்றாலே எல்லோருக்கும் பிரியம்தான்! அதிலும் சுவாரஸ்யமான விளையாட்டு என்றால் கேட்க வேண்டுமா? ஆமாம்; இந்த விளையாட்டு ரொம்பச் சுவாரஸ்யமான விளையாட்டுத்தான். பார்த்தால் சாதாரணமாக இருக்கும். விளையாடுபவர்கள் சாமர்த்தியமாக விளையாட விளையாட, அபாரமாய் ஆட்டம் பிடித்துக் கொள்ளும்; வேடிக்கையாகவும் இருக்கும்.

ஒரு பெரிய கயிற்றை 5, 6 பேர்கள் வட்டமாகப் பிடித்துக் கொண்டு நிற்க வேண்டும். 10 பேர்கூட விளையாடலாம். கயிற்றில் சாவி வளையத்தை மாட்டி இருமுனைகளையும் சேர்த்துக் கட்டிவிடுங்கள். ஒருவர் வளையத்தைத் தள்ளினால் அடுத்தவர் உடனே அதைக் கைக்குள் மறைத்துக் கொள்ள வேண்டும். ஒருவன் மட்டும் யாரிடம் வளையம் இருக்கிறது என்று எட்டி நின்று சொல்லிவிடவேண்டும். எட்டி நிற்பவனுக்குத்தான் ீக்கர் என்று பெயர். வளையத்தை ஒருவர் மாற்றி மாற்றி ருவர் தள்ளிக்கொண்டே போவதை அவன் பார்க்கக் கூடாது. வன் பார்க்கும் போது சாமர்த்தியமாகத் தன்னிடம் இருப் ுபோல ஏமாற்றுவதில்தான் வேடிக்கை இருக்கிறது. ஸீக்கர் ாயம் வைத்திருப்பவனைச் சரியாகச் சொல்லிவிட்டால் பிறகு வன் ஸீக்கராகிவிடவேண்டும். மேலே உள்ள படத்தையும் தடவை பார்த்துக்கொண்டு விளையாடுங்கள், பார்க்கலாம்!

Reg. No. M. 5542.




கண்ணன் கழகம் உங்களுக்காக ஆரம்பித்திருக்கும் சங்கம். இந்தச் சங்கம் புது மாதிரியானது. இதற்குப் பல அருமையான திட்டங்கள் இருக்கின்றன. இதில் சேருபவர்களுக்குப் பல சௌகரியங்கள் உண்டு. நண்பர்கள் ஏராளமாக ஏற்படுவார்கள். விளையாட்டு, எலெக்ஷன், உல்லாச யாத்திரை, பரிசுகள், அறிவு வளர்ச்சி சாதனங்கள் முதலிய எத்தனையோ நன்மைகளும் வசதிகளும் கிடைக்கும். இதற்குள் 1800 பேருக்குமேல் நிரந்தர அங்கத்தினராகச் சேர்ந்துவிட்டார்கள்.

உங்களுக்கு இதில் உடனே சேரவேண்டுமென்று ஆசையாக இல்லையா? சேருவது மிகவும் சுலபம். இந்த இதழிலேயே ஒரு கூபன் இருக்கிறது. அதைப் பூர்த்தி செய்து கத்தரித்து அனுப்பவேண்டும். அவ்வளவுதான்.

இதே போன்ற கூபன்கள் ஒவ்வொரு மாதமும் கண்ணனில் வெளிவரும். தொடர்ந்து மூன்று மாதக் கூபன்களை அனுப்புகிறவர்கள் கண்ணன் கழக நிரந்தர அங்கத்தினர்கள். அவர்கள் பெயரைக் கண்ணனில் வெளியிடுவோம். மூன்று மாதக் கூபன்களைப் பூர்த்திசெய்து மொத்தமாக அனுப்பலாம். அவர்களுக்கு இனாமாக எனாமல் பாட்ஜ் ஒன்று கழகத்திலிருந்து கிடைக்கும். இதற்குச் சந்தாத் தொகை எதுவும் கிடையாது; கூபன்கள்தான் அனுப்பவேண்டும். ஒரே குடும்பத்தில் உள்ள குழந்தைகள் ஒரு கூபனைப் பூர்த்தி செய்து மற்றவர்கள் பெயர்களையும் அதில் சேர்த்து எழுதி அனுப்பலாம். சென்ற இதழில் பேனாப் பரிசுப் போட்டி ஒன்று வெளியிட்டோம். அதில் பரிசு பெற்ற கதை இந் இதழில் வெளியாகியிருக்கிற அடுத்த போட்டி காமெராப் ப விவரங்களை அடுத்த இத பாருங்கள். இந்தப் போட்டிகள கண்ணன் கழக அங்கத்தினர்க மட்டுமே கலந்துகொள்ளலா மற்றவர்கள் இதில் கலந் கொள்ள முடியாது.